305



ச்ராத்த காண்டம்

(தமிழுரையுடன் கூடியது)

பூர்வபாகம்.

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

கும்பகோணம்.

விலை ரூ 10—0—0

R4
N53
97139.

308
A 15

உ

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்களால் இயற்றப்பட்ட

ஸ்ம்ருதி முக்தாபலம்

என்னும் தர்ம சாஸ்த்ர க்ரந்தத்தின்

நான்காவது பரிச்சேதமாகிய

ச்ராத்த காண்டம்

பூர்வபாகம் தமிழுரையுடன் கூடியது.

இஃது

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின்

ஆஜ்ஞையை முன்னிட்டு

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்

சாரதா விலாஸ பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டு கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

விலை] 1953 [ரூ. 10-0-0

Copyright Registered.

R4
N53





॥ ஶ்ரீஃ ॥

ஶ்ரீமத்³ரமாஹ்ருʼத³யாப்³ஜகோஶாயாயுʼதாயுʼ
ஶ்ரீமத்³ருʼக்³யஜுʼஃஸாமாத²ர்வதி³வ்யாயுʼதா⁴ய
ஶ்ரீகாஞ்சீகாமகோடிபீடா²யிவ ஜக³த்³கு³ரவே
ஶ்ரீமத்³ப⁴க³வத்³ரமானுஜமுனிப்ரஸீதா³தி³தே³ஶிகாய
நமோ நாராயணாய்ய யதீ³ஃ ॥

ஸ்ரீமத்³வேத³வேதா³ங்க³விது³ஷாம் யதீ³ஶ்வராணாம் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ராணாம் ஸ்ரீமத³ஹோபி³லமடா²தீ⁴ஶ்வராணாம் ஸ்ரீமத³ழகியஸிங்க³ர்யாராத்⁴யாணாம் ஸ்ரீவைஷ்ணவஸார்வபௌ⁴மாணாம் ஸ்ரீமத்³வேங்கடேஶமஹாதே³ஶிகாணாம் ஸ்ரீமத்பாதா³ரவிந்த³ம் ஸ்ரீவைஷ்ணவஜனாஶ்ரயணீயம் ஸ்ரீமத்³ப⁴க³வத்³ராமானுஜதி³வ்யாஜ்ஞாவர்திதாஸ்மத்³வம்ஶ்யாஃ ஸ்ரீவைஷ்ணவஸார்வபௌ⁴மாஃ ஸ்ரீமத்³வேங்கடேஶமஹாதே³ஶிகாஃ ஸ்ரீமத்³வேங்கடேஶாபி⁴தா⁴நாஃ

முத்ரை.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸ்ரீமச் சங்கர பகவத்பாத ப்ரதிஷ்டித, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதை:

செய்யப்படுகிறது.

நாராயண ஸ்மரணம்.

ச்ருதி ஸ்ம்ருதி முதலிய ப்ரமாணங்களால் ஸித்தித்துள்ள தர்மங்களை ஸ்ம்ருதி முதலியவைகளில் மத பேதத்தால் பலவிதமாய், தோன்றுகின்றவைகளை அதிகாரி பேதத்தைக்கொண்டு ப்ரமாணங்களை முதலில் காண்பிவிப்பதுடன் நிர்ணயித்துத் தெரிவிப்பதற்கு ஸ்ம்ருதிமுக்தாபலம் என்கிற உயர்ந்த நிபந்தத்தை ஆறு காண்டங்களுடையதாய் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்கள் செய்தார் என்பது ஆஸ்திகர்களின் ஸமூஹத்திற்கு அறியப்படாததல்ல. இதற்குள் அடங்கியதும், பித்ரு ப்ரஸாதத்தைச் செய்வதால் ஆஸ்திகர்களுக்கு மிகவும் உபகாரத்தைச் செய்வதும், தேவபாஷா பரிசயம் இல்லாதவர்க்கும் ஸுலபமாய் அறிவதற்குத் தமிழ் பாஷை மொழி பெயர்ப்புடன் கூடியதுமாகிய ச்ராத்தகாண்டத்தை வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன ஸபையால் அச்சிடப்பட்டதை நம் முன்னில் ஸமர்ப்பிக்கப்பட்டதைப் பார்த்து மிகவும் ஸந்தோஷிக்கின்றோம். இந்த க்ரந்தத்தைப் பரிசீலனம் செய்வதால் ச்ராத்த தத்வங்களை நன்றாக அறிந்தவர்களாய், ஆஸ்திகர்கள் அவரவர்களின் அதிகாரத்துக்குத் தகுந்தபடி ச்ராத்தம் முதலிய கர்மங்களை அனுஷ்டிப்பதால் ஸர்வேச்வரனை ஆராதிப்பவர்களாய் ஸ்ரீ சந்த்ரமௌளீச்வர க்ருபையால் ச்ரேயஸ்ஸுகளை அடையவேண்டும் எனக் கோருகிறோம்.

முகாம்-ஸ்ரீ காஞ்சீ நகரம்,
விஜயஸம், பாத்ரபத
சுக்லாஷ்டமீ, புதவாரம்.

நாராயண ஸ்ம்ருதி:

முகவுரை

நமது தக்ஷிண பாரத தேசத்தில் ஸுப்ரஸித்தமாக விளங்கி வருகிற வைத்ய நாத தீக்ஷிதீயமென்கிற ஸ்ம்ருதி முக்தாபல நிபந்தன க்ரந்தத்தின் ஆன்ஹிக காண்ட பாகமானது வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால் தமிழ் மொழி பெயர்ப்புடன் ஏற்கனவே ப்ரசுரிக்கப்பட்டுள்ளது. இப்போது ச்ராத்த காண்ட மென்கிற பெரிய முக்ய பாகமானது தார்மிக ஸமூஹ உபகாரார்த்தமாகத் தமிழில் வெளியிடப்படுகிறது. தற்காலம் நமது தேசத்தில் காலச் சீர்கேடு காரணமாக நமது தர்மங்களும் ஆசாரங்களும் அநுஷ்டானங்களும் மறைந்தும் குறைந்தும் போய்விட்ட துரதிர்ஷ்ட நிலைமையில் ச்ராத்த தர்மம் ஒன்றுதான் எப்படியோ சிறிது உயிர் தரித்து நிற்கிறது. அதற்கு வலுவூட்டி நல்ல நிலைமையில் நீடித்து வாழச்செய்யும் கைங்கர்யத்தில் வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையானது தனது உயரிய கடமையை இதன் மூலம் செய்திருப்பது ஆஸ்திக ஸமூஹத்தின ரால் நன்றியுடன் வரவேற்கப்படும்.

தேச க்ஷேமத்திற்கும், வம்சக்ஷேமத்திற்கும், ஆத்ம க்ஷேமத்திற்கும் இன்றி யமையாத முக்ய ஸாதனமாக நமது ச்ருதி ஸ்ம்ருதி புராணேதி சாஸ்த்ரங்கள் ஹிதமாகப் போதித்த பித்ரு கார்ய தர்மங்கள் இக் க்ரந்த உதவி மூலம் ஸம்சய விபர்யயாதிகளும், குழப்பமும் நீங்கி, தெளிவு பட்டு, சுத்தமாகவும், நன்முகவும் அதிகமாயும் ச்ரத்தையுடன் நடத்த இக்கார்யம் உதவியாயிருக்கும். இதன் மூலம் தர்மானுஷ்டானங்களுக்குப் புதிய சக்தி ஏற்பட ஹேதுவுண்டு.

தீக்ஷிதீயத்தின் உயர்வும் உபகாரமும்

நிபந்தன க்ரந்தங்கள் எந்த நோக்கத்துடன் ஏற்பட்டனவோ அந்தக் கார்யத்தைத் தீக்ஷிதீயமானது வெகு திறமையுடன் நிறைவேற்றியிருக்கிறது. அதனாலேயே இந்த நிபந்தனத்துக்கு நம் தேசத்தில் மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருக் கிறது. வைதிக மதத்தில் நிபந்தன க்ரந்தங்கள் அத்யந்தம் அபேக்ஷிதங்கள். நிபந்தன க்ரந்தங்கள் தோன்றுவிடில் தர்மா தர்ம வ்யவஸ்தைகளையும், அனுஷ் டான நியமங்களையும் தார்மிகர்கள் யதாவத்தாக அறிந்து அனுஷ்டிக்க முடியாது. குழப்பமே ஏற்படும். ஸ்ம்ருதிகள் தர்மா தர்ம வ்யவஸ்தைகளைச் செய்திருந்த போதிலும் ஸ்ம்ருதிகளை மட்டும் வைத்துக் கொண்டு அநுஷ்டான நிர்ணயம் செய்வது ஸாத்யமாகாது. ஸ்ம்ருதிகள் பலவிதங்கள். ஒவ்வொன்றும் குறிப்பாக ஒரு சில விஷயத்தை மட்டும் ப்ரஸ்தாபித்து நின்று விட்டன. பூர்ணோபதேசம் காணப்படவில்லை. சில ஸ்ம்ருதிகளில் ஸந்த்யாவந்தன ப்ரயோகம் சொல்லப் படவில்லை. சிலவற்றில் ச்ராத்த ப்ரஸ்தாவமில்லை. ஆசௌசாதி வேறு பல முக்ய விஷயங்களும் சிலவற்றில் காணப்படவில்லை. ஆனால் இவை வேறு சில ஸ்ம்ருதி களில் காணப்படுகின்றன. மேலும் ஒரே விஷயத்தைப் பற்றி ஸ்ம்ருதிகள் பரஸ்பர விரோதம் உள்ளவை போலும் தோன்றக்கூடியவை. ஆகையால் வைதிக மதத்தில் இருக்கிற ஸகல ஸ்ம்ருதிகளையும் பார்த்து ஸந்த்யா, ச்ராத்தாதி

ப்ரயோகங்களை க்ரோடீகரித்து ஸ்வரூபப்படுத்துவது நிபந்தன க்ரந்தங்களின் கார்யமாகும். பரஸ்பரம் விருத்தம்போல் தோன்றும் ஸ்ம்ருதி வசனங்களுக்கும், கால, தேச, அதிகாரி பேதமாக விஷய வ்யவஸ்தை செய்து விரோதங்களைப் பரிஹரித்து அநுஷ்டானத்தை நிர்ணயிப்பதும் நிபந்தனங்களின் மிகப்பெரிய பொறுப்பாயிருக்கிறது. மனு, யாஜ்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகளுக்கு வ்யாக்யானம் செய்த மேதாதிதி, விஜ்ஞானேச்வராதி மஹான்களும் நிபந்தனம் செய்துள்ளார் களாயினும், அவர்கள் மூல ஸ்ம்ருதி வசனத்தையனுஸரித்து வ்யாக்யான க்ரந்த மெழுதியதால் அவர்களுடைய க்ரந்தங்களும் அபூர்ணங்களே. அதாவது வைதிக மதத்திற்கு அபேக்ஷிதங்களான எல்லா விஷயங்களையும் அவைகளிலிருந்து அறிந்து கொள்ள முடியாது. ஆகையால், வர்ண தர்மங்கள், நான்கு ஆச்ரம தர்மங்கள், அபர ஸம்ஸ்காரம், ஆசௌசம், ச்ராத்தம், ப்ராயச்சித்தம், ஸ்த்ரீ தர்மம், தாயபாகம், த்ரவ்யசுத்தி போன்ற ஸகல வைதிக தர்மங்களையும் ஒன்று விடாமல் ஸகல ஸ்ம்ருதிகளையும் பார்த்து வரிசைப்படுத்தி நிர்ணயிக்கும் நிபந் தனம் தான் பூர்ண நிபந்தனமாகும். ஹேமாத்ரி போன்ற அதிப்ராசீன நிபந் தனங்கள் சில இந்த வழியில் சிறந்து விளங்குகின்றனவாயினும் தீக்ஷிதீயம் அவை களையும்விடப் பல அம்சங்களில் முன்னேறி நிற்பதைத் தர்மசாஸ்த்ரஜ்ஞர்கள் அறியமுடியும். தீக்ஷிதீயமானது, ஆப்ததமமான ப்ரமாண கோடியில் சேர்ந்த நிபந்தனங்களுள் ஒன்றுகக் கடைசியில் அவதரித்ததாகையால், இதில் ப்ராசீன நிபந்தனங்களையும் நன்கு ஆராய்ந்தும், அவைகளில் காணக்கூடிய குறைவு நிறைவு களை ஸமீகரணம் செய்தும், அவைகள் செய்துள்ள வ்யவஸ்தைகளையும், நிர்ணயங் களையும் சீர்தூக்கிப் பார்த்தும் லோக ஹிதமான வ்யவஸ்தைகளைச் செய்ய முடிந் திருக்கிறது. ஆதலால் தீக்ஷிதீயமானது ஸகல விஷயங்களிலும் பூர்ணோபதேசம் செய்துள்ள பூர்ண க்ரந்தமாயிருக்கிறதால் இதற்கு உயர்வும், ஆதரவும் நம் தேசத்தில் அதிகமானது.

தீக்ஷிதீயத்திற்கு இந்த ஏற்றமிருப்பதால்தான் தக்ஷிண தேச வைதிக ஸமூஹத்தினரால் ஸம்ப்ரதாய பேதமின்றி இது அனுஷ்டாபக ப்ரமாண க்ரந்த மாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. தீக்ஷிதீயத்திற்கு முன்பாகத் தென் தேசத்தில் தோழப்பர் க்ரந்தம் சிலரிடம் ப்ரசாரத்திலிருந்த போதிலும் அதுவும் அபூர்ணமான நிபந்தனமாகவே இருந்தது. அந்த க்ரந்தத்தில் ச்ரௌத தர்மங்கள், ப்ராயச்சித்தங்கள் போன்ற பல அம்சங்கள் விரிவாகச் சொல்லப்படவில்லை. ப்ரத்யக்ஷ வேத விஹிதங்களான நித்யங்களான ச்ரௌத யஜ்ஞாக்நிஹோத்ராதி அநுஷ்டானங்களைத் தோழப்பர் க்ரந்தம் வற்புறுத்தாததற்குக் காரணம் தெரிய வில்லை. தீக்ஷிதீயத்திலோ இது வெகு விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

தென் தேசத்தில் தீக்ஷிதீயத்திற்கு ஏற்பட்டுள்ள ஏற்றத்துக்கு ஒரு உதா ஹரணம் மாத்திரம் காட்டுவோம். வைஷ்ணவ முனித்ரய ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரவர்த்தகராயும், ஒரு பெரிய பிரிவினரால் மஹாசாரியனாகக் கொண்டாடப் படுகிறவருமான சிஷ்டச்ரேஷ்டர் "ஸ்ரீ கோபாலார்ய மஹாதேசிகன்" என்கிற ஆசார்யர் "ச்ராத்த ப்ரயோகம்" என்கிற க்ரந்தம் செய்துள்ளார். அதன் ஆரம் பத்தில் "வைத்யநாதீய நிபந்தன க்ரந்தத்தையும் ஆதாரமாகக் கொண்டு இதை எழுதுகிறேன்" என்று வெளுநாயீபாவு நிவாலுநழி என்பதால் கூறு கிறார். அந்த ஆசார்யன் இப்படிக் கூறுவதை ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

தமது ச்ராத்த ப்ரயோக க்ரந்தமானது தீக்ஷிதீயத்தை அநுஸரித்திருக்குமென்று சொல்லி, அதன் மூலம் ஓர் ஏற்றத்தையும், அதன் காரணமாக எல்லா வைதிக சிஷ்டர்களும் தமது க்ரந்தத்தை ஆதரிக்கக்கூடுமென்பதையும், தீக்ஷிதீயத்திற்கு விரோதமாயிருந்தால் ப்ராமாணிகர்கள் அங்கீகரிக்க மாட்டார்களென்பதையும் அவர் உணர்ந்திருந்தார். அக்காலத்தில் வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களிடமும் தீக்ஷிதீயம் அநுஷ்டாபக க்ரந்தமாக ஊன்றியிருந்தது இதனால் தெளிவாகிறது.

ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜஸ்வாமி என்கிற மஹாவித்வானான யதியும் தாம் எழுதிய "அபிநவாசௌச ஸங்க்ரஹம்" என்ற க்ரந்தத்தில் தீக்ஷிதீய நிர்ணயங்களை வெகுவாக வெளியிட்டிருக்கிறார். வைஷ்ணவத்தில் பெரிய ஆசார்ய ஸ்தானம் வஹித்தவர்களே இவ்வாறு தீக்ஷிதீயத்தை ப்ரமாணமாகக் கொள்ளுகிறார்கள். வேறு பல வைஷ்ணவ வித்வான்கள் எழுதிய சிற்சில துண்டுப் புஸ்தகங்களிலும் தீக்ஷிதீய விசார நிர்ணயாதிகளை ப்ரமாணமாக எடுத்துக் காட்டியிருப்பதையும் பார்க்கிறோம். ஆதலால் தீக்ஷிதீயம் தோன்றியது முதல் ஸம்ப்ரதாய பேதமின்றி ஸகலராலும் ப்ரமாண க்ரந்தமாக அங்கீகரிக்கப்பட்டு இன்று வரையில் அது ச்ரேஷ்டமாக விளங்கி வருகிறது.

உயர்வுக்குக் காரணமென்ன?

தீக்ஷிதீயத்திற்கு வைதிக ஸமூஹத்தில் மிகுந்த ஆதரவு ஏற்பட்டதின் காரணமென்ன? தீக்ஷிதருடைய நிஷ்பக்ஷபாதமானதும், ப்ரமாண, ந்யாயாநுஸாரியாயுமுள்ள விசார, நிர்ணயத் திறமைதான். நிபந்தன க்ரந்தங்கள் வைதிக மதத்தில் ச்ருதி ஸ்ம்ருதிகள் போல் ஸ்வத: ப்ரமாணங்களல்ல. அவைகளை ப்ரமாணங்களாக ஒருவர் அங்கீகரித்தே ஆக வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஆயினும் நிபந்தனக்காரர் சிஷ்டராயும், ஆப்தராயும், லாபலோபமற்றவராயும், மீமாம்ஸாதி ப்ரமாணங்களையும், ந்யாயங்களையும், சிஷ்டாசாரங்களையும் ஆதாரமாகக் கொண்டே தங்களுடைய நிர்ணயங்களைச் சொல்லியிருக்கவேண்டும். இல்லையேல் அவைகள் வித்வான்களால் தள்ளப்படலாம். தீக்ஷிதர் பரம சிஷ்டராயும், யஜ்ஞாதி வைதிக தர்மானுஷ்டான நிரதராயுமிருந்து மீமாம்ஸா சாஸ்த்ர ப்ரமாணத்தைக் கொண்டும் ஸத்நியாயங்களைக் கொண்டும் நிர்ணயங்கள் செய்கிறார். சில நிபந்தனகாரர்களைப்போல் "தூளிப்ரக்ஷேபம்" "கண்ணில் மண்ணைத்தூவி ஏமாற்றுவதற்கு மீமாம்ஸை உபயோகப்படுகிறது" என்று மீமாம்ஸா சாஸ்த்ரத்தை நிந்திக்காமலும் அதற்கு உள்பட்டும் நிர்ணயங்களை வெளியிட்டிருப்பதாலேயே எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களும் தீக்ஷிதீய நிர்ணயங்களைப் புறக்கணிக்க முடியாமல் த்ருப்தியுடன் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். மேலும், தீக்ஷிதர் சில மூரட்டு நிபந்தனகாரர்களைப்போல் தமது நிர்ணயங்களை நிர்ப்பந்தமாக நம்மீது திணிப்பதில்லையென்ற பெருந்தன்மையுமுள்ளது. சாஸ்த்ரம் விகல்பித்துக் கூறுமிடங்களில் "தேசாசாரப்படி வ்யவஸ்தை" "உசிதம் போல் க்ரஹிக்கவும்" "சிஷ்டாசாரப்படி இதில் வ்யவஸ்தை" என்று சொல்வதை எங்கும் காணலாம்.

புருஷாஹுதி ஸம்ஸ்காரம்

இனி இந்த ச்ராத்த காண்டத்தில் இரண்டு பாகங்கள் உண்டு. முதல் பாகத்தில் அபரகார்யங்கள் என்கிற சரீர ஸம்ஸ்கார விதிகள், கர்த்ருக்ரமம், அக்நி

நிர்ணயம் போன்ற பற்பல முக்ய விஷயங்கள் ப்ரதிபாதிக்கப்படுகின்றன. இரண்டாவது பாகத்தில் பற்பலவித நித்ய நைமித்திக காம்ய ச்ராத்தங்கள் முதலியவைகளும் விரிவாகச் சொல்லப்படுகின்றன.

வைதிக மதத்தில் ஜாதகர்ம, நாமகரண, சௌள, உபநயநாதி ஸம்ஸ்காரங்களைப்போல் அபரகார்யமும் ஓர் சரீர ஸம்ஸ்கார தர்மமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பிறவி முதல் தர்ம ஸாதனமாயிருந்து தேவபித்ரு கார்யங்களையும் பகவத் பக்தியையும் செய்து தெய்வத்தன்மையடைந்த இந்தப் புனித மனித சரீரத்தை வெறும் உடலென்று அலக்ஷ்யமாக எறிந்துவிடமுடியாது. ஆகையால் அதைச் சாஸ்த்ர விதிப்படி ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமென்று நமது வைதிகமதம் நிர்ணயித்து அதற்கான ப்ரயோக திட்டங்களையும் வகுத்துக் கொடுத்திருக்கிறது. ஸம்ஸ்காரங்களை "நிஷேகாதி-தஹநாந்தங்கள்" என்று நமது சாஸ்த்ரங்கள் அபரஸம்ஸ்காரத்தையும் சேர்த்தே வ்யவஹரிக்கின்றன.

வைதிகைஃ கர்மபிஃ பூணை்யஃ நிஷேகாதை்யஃ
தி்ஜந்மநாம் । கார்யஃ ஶரீரஸம்ஸ்காரஃ பூத்ய வெஹ வ
பாவநஃ ॥

என்று மனு வசனத்திற்குத் தீக்ஷிதர் விவரணம் கூறுகையில்

'நிஷேகாதை்யஃ = ஶ்மஶாநபர்யந்தைரித்யர்த்தஃ'

என்பதால் அபரஸம்ஸ்காரமானது பரமபாவன மென்பதைக் காட்டினார். ப்ராம்ஹணாதிகளுக்கு ஏற்பட்ட சாஸ்த்ரீய சரீர ஸம்ஸ்காரங்களில் கடைசியான ஸம்ஸ்காரம் இது. இதைத் தெய்வ ஸம்ஸ்காரமென்று தீக்ஷிதர் நிரூபித்து, இதனால் தேவர்களுடைய ஸாம்யத்தையும் ஸாயுஜ்யத்தையும் இறந்தவன் பெறுகிறானென்று காட்டியுள்ளார்.

இந்த ஸம்ஸ்காரத்தை "புருஷாஹுதி:" என்று நமது ச்ருதியே கொண்டாடுகிறது. க்ருஹஸ்தன் யாவஜ்ஜீவம் பற்பல தேவ பித்ரு யாக ஹவிஸ்ஸுக்களால் தான் உபாஸித்து வந்த அக்நி ஹோத்ர-ஔபாஸனாதி அக்நிகளில், கடைசியில் தனது சரீரத்தையே ஹவிஸ்ஸாக ஹோமம் செய்வது புருஷாஹுதி என்று சொல்லப்படுகிறது.

'பூருஷாஹுதிர்ஹ்யஸ்ய ப்ரியதமா'

என்ற தைத்ரீய ச்ருதியானது புருஷாஹுதியே பகவானுக்கு ப்ரியதமம் என்று கொண்டாடுகிறது. ஆபஸ்தம்பரும் தமது பித்ருமேதஸூத்ர ஆரம்பத்தில்

'பூருஷாஹுதிர்ஹ்யஸ்ய ப்ரியதமேதி விஜ்ஞாயதே'

என்ற ஸூத்ரத்தில் புருஷாஹுதியைத் தைத்ரீயச்ருதி கொண்டாடுவதாக ப்ரஸ்தாபித்து அந்த விதியை விவரிக்கிறார். ஆகையால் தஹன ஸம்ஸ்காரமானது ப்ரத்யக்ஷ ச்ருதி மூலகமாயிருப்பதால் ப்ரபலமென்றும், அதிக மஹிமை பொருந்தியதென்பதும் ஆபஸ்தம்ப மஹர்ஷியின் அபிப்ராயமாக நிற்கிறது.

ஆபஸ்தம்பர் மேலும் இந்தப் புருஷஸம்ஸ்கார மஹிமையை விளக்குகிறார்.

யத்ர ஸ்ருஷ்டிரேவ தத நாநாகரிஷணாமேஷோऽதே
வர்ஷஸஂஸ்தாரோ வியீயதே। ததः வரிஷத்ரயं
மஹம் க்ருத்ஸ்நம் ப்ரவர்தயதே' என்று.

"க்ருஹஸ்தனுக்குக் கடைசியாகச் சொல்லப்படுகிற ச்மசானகர்மம் என்கிற அபர கர்மாவானது, யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ர ஔபாஸனயஜ்ஞாதி நாநாவித கர்மாக்களைச் செய்த பின் கடைசியான புருஷ ஸம்ஸ்கார கர்மாவாக விதிக்கப் பட்டுள்ளது. இந்தப் புருஷ ஸம்ஸ்காரத்திற்குப் பிறகு எல்லையற்ற புண்யமும் ஸ்வர்க்க சப்தத்தால் சொல்லப்படுகிற மோக்ஷ பலனும் கிடைப்பதாக ச்ருதி களில் காணப்படுகிறது" என்கிறார் தீக்ஷிதர்.

ப்ரம்ஹஸாயுஜ்யம்-மோக்ஷம்

இந்தப் புருஷ ஸம்ஸ்காரத்தில் ப்ரம்ஹமேதம், பித்ருமேதம் என்ற இரண்டு பிரிவுகள் சொல்லப்பட்டுள்ளன. இவ்விரண்டும் மிகுந்த உத்க்ருஷ்டங்களென்றும், நற்கதிக்கு ஸாதனமென்றும், ஈச்வர ஸாயுஜ்யம் பெற ஹேதுவென்றும் ச்ருதி ஸ்ம்ருதிகள் உபதேசிக்கின்றன. இவ்விரண்டு ஸம்ஸ்காரங்களும் புருஷோத்தமனை பகவானை அடைவதற்கு ஸாதனமென்று 'வைஷ்ணவம் வர்ஷோத்தரம்' என்பதால் சொல்லி 'க்ருதயுகாதிஷு க்ருதாதிஷு' என்று ஸகல யாகங் களையும் விட உயர்ந்த யாகம் இந்தப் புருஷாஹுதி யாகமென்பதைத் தீக்ஷிதீயம் நிரூபிக்கிறது. இந்த உயர்ந்தஸம்ஸ்காரத்தினால் அல்ப அஸ்த்ரகாம்யமான ஸ்வர்க்க பலன்தான் ஏற்படுமென்ற சிலருடைய ஸம்சயத்தையும் தீக்ஷிதீயம் நிவ்ருத்தி செய்து மோக்ஷம் தான் பலன் என்பதையும் ஸ்திரப்படுத்தியது.

கவயஶ்ச - சோக்ஷः, ஸ்ருக் ஆதி கெவிக், தஜ்ஜாதீய என்று. மேலும் ஒரு ச்ருதியானது 'ஸ வஷः யஜ்ஞாயுதீ யஜமானः கஸ்ஸா ஸ்ருக்ம் லொகமேதி' என்பதால் யஜ்ஞாயுதமெனப்படுகிற யஜ்ஞ பாத்ரங்களுடன் தஹனம் செய்யப்படுகிற யஜமானன் வெகு வேகமாக ஸ்வர்க் கத்தை அடைகிறான், என்றது. இங்கு ஸ்வர்க்கமென்பது மோக்ஷத்தைக் குறிப் பிடுகிறதாக நிர்ணயித்தார்கள். போதாயனரும் 'ஸ்வதயம்ஸ்தாரோணாஶ்ம லொகீ' என்பதால் இந்த ஸம்ஸ்காரம் பரலோக ஸாதகமென்று கூறினர்.

ச்ருதிகல்பஸூத்ர விஹிதம்.

இவ்வாறாக தஹன ஸம்ஸ்காரமானது மிக உத்க்ருஷ்டமான தென்றும், யாகங்களுள் உத்தமமான யாகமென்றும், பரமாத்மஸாயுஜ்யமாகிற மோக்ஷ ஹேதுவென்றும் ச்ருதி ஸ்ம்ருதி கல்பஸூத்ராதி நமது உத்தம ப்ரமாணங்கள் யாவும் ஏகமுகமாக உத்கோஷிப்பதை வைதிக மதஸ்தர்களில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். பாமரர்களன்றி, படித்தவர்களிலும் பெரும்பாலோர் இதையறிய ச்ரத்தை கொள்ளவில்லை. "ப்ரேத கார்யம்" என்ற அலக்ஷ்யப் போக்கு காரண மாக இதன் மஹிமை அறியப்படாமல் ஒதுக்கித் தள்ளி விடப்பட்டு விட்டது. இதனால் புரோஹிதர்கள் என்கிற யாஜகர்களும் பலர் இந்தப் புருஷாஹுதி

ப்ரம்ஹமேத ப்ரயோகத்தை யதாவத்தாக அறிந்து அனுஷ்டானம் செய்து வைக்க முடியவில்லை. ஆகையால் க்ருஹஸ்தனின் ஆச்ரம ஸம்ஸ்காரங்களில் கடைசியானதும் முக்யமானதும் பூர்த்திகரமானதுமான இந்த அபர ஸம்ஸ்காரத்தை இனியாவது ஆஸ்திகர்கள் ச்ரத்தையுடன் அனுஷ்டிக்க வேண்டியதற்காகவே அதன் மஹிமையை தீக்ஷிதீயம் விவரித்துக் கூறுகிறது. அதை நாம் விளக்கினோம்.

இந்தப் புருஷாஹுதி ஸம்ஸ்காரமானது ப்ரத்யக்ஷ ச்ருதி விஹிதமாயிருப்பதுடன் தைத்திரீய ஆரண்யகத்தில் அதற்கான மந்த்ரங்களும் படிக்கப் பட்டுள்ளன. கல்பஸூத்ரகாரர்களான ஆபஸ்தம்ப, போதாயன, பாரத்வாஜாதி மஹர்ஷிகள் பித்ருமேத ஸூத்ரமென்கிற கல்ப ஸூத்ரங்களைச் செய்து அபர ப்ரயோகத்தைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இறந்த சரீரத்தின் ஸம்ஸ்கார விஷயத்திலும் வைதிக ஸம்பந்தமும் தெய்வத்தன்மையும் பூர்ணமாயிருக்கும்படி செய்திருப்பது உலகத்தில் நமது வைதிக மதமொன்றில்தான் காணக்கூடியது.

உலக மதங்கள் யாவற்றிலும் உண்டு.

மரணத்திற்குப் பிறகும் ஜீவயாத்ரை உண்டென்றும் மறு ஜன்மம் உண்டென்றும் உலக ஆஸ்திக மதங்கள் யாவும் ஒவ்வொரு மாதிரியாக ஒப்புக் கொண்டிருக்கின்றன. ஆகையால்தான் இறந்தவரின் சரீர அடக்க கார்யத்தில் உலகிலுள்ள ஸகல ஆஸ்திக மதங்களும் ஒவ்வொரு விதமான மத ஸம்பந்த முறையை ஆசரித்தே வருகின்றன. மத ஸம்பந்த கார்யம் செய்யாமல் சரீரத்தைக் கட்டை, கல்போல் எறிந்து விடுவதில்லை. ஆனால் மத ஸம்பந்த ப்ரயோக முறையில் ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வழியைப் பின்பற்றிச் செய்கின்றது. இதற்கு அந்தந்த மதங்களின் வேதவிதிகளும் குருமார்களின் கட்டளையுமே காரணமாகும். தெய்வம், பாபம், புண்யம், பரலோகம் ஆகிய தத்வங்களை ஒப்புக்கொண்ட மதங்கள் ஆஸ்திகமதங்கள் கண்ணுக்குப் புலப்படாத பரலோகாதிகளை அந்த மதத்தினர் எப்படி நம்புகிறார்கள்? அவர்களுடைய சாஸ்த்ரங்களையும், ஆப்தர்களான குருமார்களுடைய உபதேசங்களையுமே நம்பிச் செய்கிறார்களல்லவா?

க்றிஸ்தவர்கள் இறந்த சரீரத்தை மாதாகோவிலுக்கு எடுத்துச்சென்று ப்ரார்த்தனை நடத்துகிறார்கள். பாதிரிகள் வந்து அச்சமயத்திற்கான பைபிள் மந்த்ரங்களை ஓதி அந்தச் சரீரத்திற்கு நல்ல கதி கிடைக்க ப்ரார்த்தனை செய்து பற்பல சடங்குகளை நடத்தி, சரீரத்தை அடக்கம் செய்வது மத ஸம்ப்ரதாய ரீதியில் நடந்துவருகிறது. முஸ்லீம்களும் இறந்த சரீரத்தை மசூதிக்குக் கொண்டு போகிறார்கள். அங்கு மௌல்விகள் பற்பல சடங்குகள் நடத்தி, குரான் மந்த்ரங்கள் ஓதி அடக்கம் செய்கிறார்கள். சிக்ய, பார்ஸி, ஜைன, பௌத்த இத்யாதி ஸகல மதங்களிலும் ஒவ்வொரு முறையில் சவச்சடங்கு நடக்கவில்லையா? ப்ரிட்டிஷ் ராஜகுடும்பத்தில் சில காலம் முன்பு ஏற்பட்ட ராஜமரணத்தில் பலவித மதச்சடங்கு முறைகள் நடந்ததைப் பத்திரிகைகளில் படித்தோம். மஹாயுத்தம் ஆரம்பிக்கு முன்பாக ஜப்பான் சக்ரவர்த்தி பௌத்த முறைப்படி தேவாலயத்தில் பித்ரு தேவர்களை வணங்கி அனுமதி வேண்டிக்கொண்டதாகவும் பத்திரிகைகளில் வெளிவந்தது.

இந்த இருபதாம் நூற்றாண்டு நாகரிகம் தாண்டவமாடுகையிலும், ஒரு பக்கம் நாஸ்திகவாதம், லோகாயதிகம் விஷம்போல் பரவி வருகையிலும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற ஸகல தேச மதங்களும் இறந்த சரீர ஸம்ஸ்கார விதியைச் செய்துவரவில்லையா? இறந்த சரீரம் தெய்வத்தை அடைந்து க்ஷேமம் பெறுகிறதென்று யாராவது நேரில் பார்த்தவர்களுண்டா? பைபிள், குரான் மந்த்ரங்களாலும் சடங்கு முறைகளாலும் பரலோக நன்மை ஏற்படுகிற தென்பதும் உண்மையா? உண்மை என்றே ஆஸ்திக மதங்கள் உறுதி கூறுகின்றன.

நம்முடையது நமக்கு உயர்ந்தது.

இப்படி உலகம் முழுவதும் வ்யாபித்துள்ள மதங்கள் யாவற்றும் தங்கள் சாஸ்த்ர நம்பிக்கையுடன் இன்றுகூட மதச்சடங்குகளை நடத்திவருவதை நாம் ப்ரத்யக்ஷத்தில் காணுகிறோம். இப்படியிருக்க நமது அபர கர்ம மஹிமை பற்றி நம்மவர்களே நம்பிக்கையற்று அலக்ஷ்யம் செய்வது ந்யாயமா? நமது ஸம்சயாத்மாக்கள் இதர மதஸ்தர்களைப் பார்த்தாவது புத்தித்தெளிவு பெற வேண்டாமா? சரீர அடக்கத்திற்கான ப்ரயோகம் அல்லது முறை ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு மாதிரியாயிருக்கலாம். நமது வேதாதிகள் விதித்த சடங்கு, அல்லது ப்ரயோக முறை நமக்கு க்ராஹ்யமாகும். அர்த்தமற்ற மூடநம்பிக்கை என்ற குதர்க்கவாதமும், நாஸ்திக வாதமும் நமது மதமன்றி எல்லா மதங்களிலும் பேச இடமில்லையா?

பிற மதஸ்தர்களின் முறையை நாம் தூஷிக்கவேண்டாம். அவர்களும் நமது ப்ரயோகமுறைகளைத் தூஷிக்கவேண்டியதில்லை. அர்த்தமற்ற மூடநம்பிக்கை என்று சொல்லுவதாயிருந்தால் எல்லாமதங்களிலும் இந்தத் தூஷணம் சொல்ல முடியுமென்பதைச் சீர்திருத்தக் குதர்க்கவாதிகள் உணரவேண்டும்.

மூட நம்பிக்கையல்ல,
விஜ்ஞானிகளும் ஒப்புக்கொள்கிறார்கள்.

ஆனல் இந்த நவீன காலத்தில் விஜ்ஞானிகள் தங்களையே தெய்வமாகப் பறையடித்துக்கொள்ளுகிறதைக் கண்டு உலகம் மயங்கி நிற்கிறது. எதற்கும் விஜ்ஞான ரீதியில் ஆதரவு காட்டாதவரையில் அதில் கௌரவ புத்தி ஏற்படுவ தில்லை. நமது வர்ணாச்ரம ஆசார அனுஷ்டானங்களுக்கு ஸயன்ஸ் ரீதியிலும் விசேஷ மஹிமையிருப்பதைப் பல நிபுணர்கள் நிரூபித்திருக்கிறார்கள். நம்முடைய சுத்தி, அசுத்தி கொள்கையும், ஆசாரங்களும் கண்ணுக்குப் புலப்படாத அணு ப்ராணிகளின் ஸம்பந்த அடிப்படையில் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. ஓரிடத்திலுள்ள புஷ்பத்திலிருந்து அதன் வாஸனை வெகுதூரம் பரவுகிறது. அந்தப் புஷ்பத்திலிருந்து வாஸனை அணுக்கள் ஏராளமாகக் கிளம்புகின்றன. அவை பரவுகின்றன. இம்மாதிரி ஸகல வஸ்துக்களிலிருந்தும், மனிதர் முதலிய ஸகல ப்ராணிகளிடமிருந்தும் பரமாணுக்கள் அததன் குண தோஷத்திற்கு ஏற்ற படி வெளிக்கிளம்பிப் பரவுவது இயற்கையாயிருக்கிறது. இதை நமது ஆயுர் வேதம் உறுதிப்படுத்தியது. "குஷ்டம், ஜ்வரம், கண்வலி, தொற்றுநோய் முதலிய வ்யாதிகள் ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம் பரவுகின்றன" என்று

கூஷ்ம ஜ்வரஶ்ச ஶோஷஶ்ச நெத்ராபிஷ்யந்த ஸவ ச ।
ஔபஸர்கிகரோகாஶ்ச ஸம்க்ராமந்தி நராந்நரம் ॥

என்று வாக்படாசார்யர் கூறுகிறார், அஷ்டாங்க ஹ்ருதயத்தில்.

இங்கு நராந்நரம் என்பதால் "ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதன் மீது மேற்கண்ட வ்யாதிகள் ஒட்டிக்கொள்ளுகின்றன" என்று கூறப்படுகிறது. வ்யாதிகள் கண்ணுக்குப் புலப்படாமல் ஸங்க்ரமிப்பது எப்படி? ரோக பரமாணுக்கள் உயிருள்ளவை. அவை ஸூக்ஷ்மமானவை, கண்ணுக்குப் புலப்படாமல் பரவுகின்றன, என்கிற தத்வம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆங்கில வைத்ய ஸயன்ஸின்படி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ஜேம்ஸ் (James) நுண்ணிய உயிர் ப்ராணி தத்வத்தையே நமது வைத்ய நூல்கள் பரமாணுப் பூச்சியாக ஒப்புவது நிதர்சனமாகிறது. இந்த ரோக பரமாணு என்கிற அணுப் புழுக்கள், ரோகியின் சரீர ஸ்பர்சம் மூச்சுக் காற்று, சேர்ந்து சாப்பிடுதல், வஸ்த்ரம், படுக்கை முதலியவை மூலம் மற்றவர்கள்மீது பரவுகின்றனவென்றும் அஷ்டாங்க ஹ்ருதயத்தில்.

'ப்ரஸஜ்ஜாக் காத்ரஸம்ஸ்பர்ஶாக் நிஶ்வாஸாக் ஸஹ
ஹொஜநாக் । ஸஹ ஶய்யாஸநாக்'

என்பதால் சொல்லப்பட்டது.

நமது வர்ணாச்ரம ஆசார விதிகளும், நமது சுத்தி முறைகளும் இந்த அணு ப்ராணி தத்வ அடிப்படையில் மிகுந்த அர்த்தபுஷ்டியுள்ளவை என்பதைப் பல உதாஹரணமூலம் "ஸம்ஸர்க்க தோஷ நிரூபணம்" என்ற துண்டு ப்ரசுரத்தில் வெகுவாகப் பல வர்ஷங்களுக்குமுன் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறது. ப்ரக்ருதத்தில் அபரகார்ய ஸமயங்களில் நாம் அனுஷ்டிக்கும் ஆசௌசம் சுத்திமுறை போன்ற ஆசாரங்கள் வெறும் மூடநம்பிக்கையல்லவென்றும் இந்த அணு தத்வத்தின்படி மிகுந்த அர்த்தமுள்ள அவச்ய கார்யங்களென்பதையும் ஆங்கில வைத்ய நிபுணர் ஒருவர் கொண்டாடியிருப்பதைச் சிறிது காட்டுவோம்.

கர்னல் டாக்டர் கிங்க் ஐ. எம். எஸ். (*Dr. King I. M. S.*) சொல்லுகிறார்.

பல வர்ஷங்களுக்குமுன் நமது இந்தியா கவர்ண்மெண்டில் ஸானிடரி கமிஷனராக மஹா பெரிய பதவி வகித்துவந்த கர்னல் டாக்டர் கிங்க் ஐ. எம். எஸ். என்ற மேதாவி, ஆர்யர்களின் ஆசாரங்கள் ஸுகாதார ரீதியில் மிக்க உன்னதமாக விளங்குகின்றனவென்பதை அநேக உதாஹரணமூலமாக விளக்கி ஓர் வ்யாஸம் எழுதினார். அது மதுரைத் தமிழ்ச்சங்கப் பத்திரிகையான "செந்தமிழ்" என்ற சிறந்த பத்திரிகையில் தொடர்ந்து ப்ரசுரிக்கப்பட்டிருப்பதை யாவரும் பார்க்கலாம். (செந்தமிழ் 9-ஆவது ஸம்புடம்) அவர் ஆர்யர்களின் ஆசார முறை மூடநம்பிக்கை பொருந்தியதல்லவென்றும், விஜ்ஞான தத்வ ரீதியில் விமர்சித்தால் மிகுந்த ஸுகாதாரம் பொருந்தியவையென்றும், ஆர்யர்களின் ஆசாரங்கள் அணு அல்லது நுண்ணிய ஜீவ ப்ராணி (ஜேம்ஸ்) ப்ரசாரத்தை அடிப்படை

யாகக்கொண்ட உயர்ந்த விதிகளென்றும் விரிவாக விளக்கியுள்ளார். முக்யமாக ப்ரக்ருத அபரகார்ய ஸம்பந்தமான ஆசௌசம் சுத்திமுறைகளைப் பலமாக ஆதரிக்கிறார். அவருடைய வார்த்தைகளை அப்படியே இங்குச் சிறிது எடுத்து எழுதுவோம். அவர் கூறுவதாவது:—

"முன்காலத்தில் மத ஸம்பந்தமான விதிகளும், ஸுகாதார விதிகளும் ஒன்றுகவே பிணைக்கப்பட்டிருந்தன. ரோக காரகமும், ரோக நிவாரகமுமான ஆசார ரஹஸ்யங்களை ஆர்யர்களே அறிந்து சொல்லக்கூடியவர்களாயினர். ஆரோக்ய சாஸ்த்ர விதி நிஷேதங்கள், நித்ய நைமித்திக வைதிக கர்மாக்களோடு பிரிக்கவொண்ணாத விதமாகப் பிணைந்துகிடந்தன."

"வ்யாதியானது நுண்ணிய உயிருள்ள பூச்சிகளினால் உண்டாகிறது. உயிருள்ள வஸ்து ஒன்று இருக்கிறதென்றும், அதனால் வ்யாதிகள் பரவுகின்றன வென்றும் ஸித்தாந்தத்தை அனுஸரித்தே ஆர்யர்கள் ஸுகாதாரச் சட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்."

மேலும் டாக்டர் கிங்க் கூறுவதாவது:—

"ஆதலால் ஆர்யர்கள், ஆடைகள், ஆஹாரங்கள், ஆசௌசமுள்ளவனுடன் கலப்பு, இவைகளைப் பற்றி விவரமாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள்."

"ப்ரேதங்கள் முதலியவைகளிலிருந்து, தொத்து வ்யாதிக்கு இடமான, அதாவது ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம் ஒட்டிக்கொண்டு வ்யாதியை உண்டாக்கக்கூடிய, வஸ்துக்களின் ஸம்பந்தம் எங்கு ஏற்பட்டுவிடுமோ என்று ஆர்யர்கள் மிகுந்த பீதியுள்ளவர்களாயிருந்தார்கள். ச்ரமஸாத்யமான ஸ்நான விதிகளும், கழுவிச் சுத்திசெய்யும் முறைகளும், பிறகு ஸுதகம் காக்கும் வியும் ப்ரயோஜனமற்ற வெறும் சடங்கு முறைகளென்று நினைத்துவிடக்கூடாது. ஆசௌச க்ரமநிர்ணயமும் அதற்குக் கால அளவும் ஏற்படுத்தியிருப்பதில் விசேஷ அர்த்தமிருக்கிறது."

"இவ்வாறு ஸூக்ஷ்மமான வித்யாஸங்களையும், ஆசௌச விதிகளையும் ஏற்படுத்தியது, தொத்து வ்யாதி அணுகாமலிருக்குமாறு ஒதுங்கியிருக்கும் காலத்தையும், ஒதுங்கியிருக்கவேண்டிய விதத்தையும் நிர்ணயிக்கும் பொருட்டே."

இவ்வாறு இந்தியா தேசம் முழுவதும் ஸுகாதார விதியைக் கண்காணிக்கும் பெரிய பொறுப்புள்ள உயர்ந்த உத்யோகம் வஹித்தவராகிய வைத்ய சாஸ்த்ர நிபுணர் டாக்டர் கிங்க், ஐ. எம். எஸ்., நமது வைதிக மதத்தின் ஆசாரங்களும், ஸ்ப்ருச்ய-அஸ்ப்ருச்யாதி ஆசௌச நியமங்களும் மெடிகல் ஸயன்ஸின்படி மிகுந்த உத்கர்ஷம் பெற்றவையென்பதைப் பற்பல உதாஹரணங்களுடன் விளக்கியிருப்பதை நவீன சீர்திருத்தக் குதர்க்கவாதிகள் ஆழ்ந்து கவனிப்பார்களாக.

ஆனால் ஸயன்ஸ் ஆதாரம் எப்படியிருந்தபோதிலும், அந்த ஆசாரங்களை நமது வைதிக மதத்தினர் காரண விசாரம் செய்யாமல் சாஸ்த்ரம் விதித்த கட்டளையென்கிற ஒரே நியமத்திற்கு உட்பட்டு, பரலோக ஸாதகமாயும், பகவத் ப்ரீதியாகவும் நம்பிக்கையுடன் அனுஷ்டித்து ச்ரேயஸ் பெற்று வருகின்றனர்.

வைதிக மதத்தில் தர்மானுஷ்டானமானது "காரண விசாரத்தை முன்னிட்டு அனுஷ்டிக்கத் தக்கதல்ல" என்று கூஹ்ஹ்ரணகாரணொ யஃஃ் என்பதால் நியமம் செய்துவிட்டார்கள்.

இவ்வாறு டாக்டர் கர்னல் கிங்க் போன்ற அன்னிய மதஸ்தர்கள் நமது வைதிக தர்மங்களின் மஹிமைகளை எப்படியறிந்தார்கள்? தீக்ஷிதீயாதி நமது தர்ம க்ரந்தங்களை அவர்கள் ஆழ்ந்து படித்ததே காரணமல்லவா? அவர்கள் படித்து அறிந்ததில் சிறிதளவாவது நம்மவர்கள் படித்துப் பரிச்சயம் செய்திருப் பார்களாவென்பது ஸந்தேஹமே. இக்குறையை இப்புஸ்தகம் நீக்குமென்று நம்புவோம்.

அபரகர்மாவிலுல் ஐஹிக க்ஷேமம்.

அபரகர்மாவிலுள்ள மந்த்ரங்கள் அச்லீலங்களென்று எவரும் நினைத்துவிடக் கூடாது. அந்த மந்த்ரங்கள் அதிகம்பீரமானவை. இறந்தவனுக்கு ப்ரம்ஹ ஸாயுஜ்யாதி ச்ரேயஸ்களைக் கொடுக்கும்படி ப்ரார்த்திப்பவை அநேக மந்த்ரங்கள். இத்துடன் அந்த மந்த்ரங்கள், ஜீவித்திருப்பவர்களுக்கும், குடும்பத்திற்கும், க்ராமத்திற்கும், பசு முதலிய ப்ராணிக்கும் க்ஷேமத்தையும், சாந்தியையும், ஆனந் தத்தையும் பெரும்பாலும் ப்ரார்த்திக்கின்றன. அவைகளை இங்கு எடுத்துக் கூறுவது ஸாத்யமன்று. ஆதலால் அபரகர்மாக்களைத் தனது க்ஷேமத்திற்காகவும் குடும்பக்ஷேமார்த்தமாகவும், க்ராம நகர க்ஷேமார்த்தமாகவும் விதிப்படி நன்கு அனுஷ்டிக்கவேண்டியது கடமையாகும்.

அபரகர்மாவும் குடும்ப ஸொத்து பாத்யமும்.

இந்த அபரகர்மாவைச் செய்யும் கடமை யாருக்கு? இதைப்பற்றி தீக்ஷிதீயத் தில் விரிவாக விசாரித்து, யார் யாருக்கு எவரெவர் கர்மாவைச் செய்யக் கடமைப் பட்டவர், என்பதை நிர்ணயித்திருப்பது விசேஷமாகும். நமது வைதிக மதத்தில் மனு யாஜ்ஞவல்க்யாதி தர்ம சாஸ்த்ரிகளும், சுக்ர, காமந்தகாதி ராஜநீதி சாஸ்த்ரிகளும் குடும்பஸொத்து பாகபாத்யத்திற்கும், அபரகர்மாவுக்கும் சட்டப் படி ஸம்பந்தத்தை ஏற்படுத்திவிட்டார்கள். குடும்பஸொத்து பாத்யத்திற்கு முக்யமான நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஸொத்து பாகம் அடைகிறவர்கள், முன்னோர்களுக்கு ச்ராத்தாதி கர்மாக்களைச் செய்து தீரவேண்டும். அந்தக் குடும்பத்தினரின், ஜாதி குல தர்மங்களையும் ஆசரிக்கவேண்டும். முன்னோர்கள் செய்துவந்த தர்மகார்யங்களையும் செய்துவரவேண்டும். இந்த நிபந்தனை மீது தான் குடும்பஸொத்து பாத்யம் ஏற்படுவதாக வைதிகமதம் நிர்ணயித்தது.

ஸொZoஸஹ்ரஸ்வஸ்ஸ்ணூஸ்ரஸ்ரீ'

அந்தந்த ஜாதி, குல, குடும்ப தர்மங்களைக் கைவிட்டவர்களுக்கும் ச்ராத்தாதி அபர கர்மாக்களைச் செய்யாதவர்களுக்கும் குடும்ப ஸொத்து பாத்யம் இல்லை யென்று நிர்மானிக்கப் பட்டிருக்கிறது.

புத்ராதிகள் ஸன்னிஹிதர்களாயிருக்கவேண்டும்.

தற்காலம் நமது வைதிகமத ஸமூஹத்தில் இந்த அபரகர்மம் போன்ற தர்மங்களின் அநுஷ்டான நிலைமை அவஸரமாகச் சீர்திருந்தவேண்டியது ஆவச்ய

மாகும். படிப்பு, உத்யோகம், ஸம்பாத்யம் காரணமாக, குடும்பங்கள் சின்னுபின்னமாகி, பிதா ஒரு பக்கமும், மாதா மற்றொரு பக்கமும், புத்ரர்கள் எங்கெங்கோ தேசாந்தரங்களிலும் வஸிக்க நேர்ந்திருப்பதால் பல குடும்பங்களில் புத்ரர்கள் மாதா பிதாக்களுக்கு அபரகார்யத்தை முக்யமாக முதல்தின அந்த்யேஷ்டி மஹா யாகத்தைச் செய்ய நேருவதில்லை. பிறரே கொள்ளியிட நேருகிறது. ஜ்யேஷ்டன் வந்தால் கனிஷ்டன் வரமுடியவில்லை. சிலவிடங்களில் கனிஷ்டன் வருகிறான். ஜ்யேஷ்டன் வருவதில்லை. தேசாந்தரம் போன புத்ரர்கள் பல மாதங்கள் கழித்து மாதா பித்ரு கர்மாக்களைச் செய்ய நேருகிறது. இதன் மூலம் ஏற்படுகிற தர்மசாஸ்த்ர சங்கடங்களையும் சிக்கல்களையும் கணக்கிட்டுச் சொல்லமுடியாது. இது தர்மமா? நமது மதம் புத்ர ஜனனத்திற்கு முக்ய ப்ரயோஜனம். முதல்நாள் அபரகர்மாவைச் செய்து, மாதா பித்ரு சரீரத்திற்கு மர்யாதை செய்வதேயாகும், என்று உபதேசிக்கிறது.

ஸாஸ்ரயாம தநு ஸரணாந்நாகிஃ ஸ்யுவா வாதுஸஞ்சிதாள்

என்பதாதிகளால் மரண காலத்தில் புத்ரன் ஸான்னித்யமிருப்பது அவச்யம் என்றும், முக்திஹேதுவென்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. தீக்ஷிதீயத்தில் இந்த அம்சம் கவனிக்கத்தக்கது. ஆதலால் மாதா பிதாக்களுடைய சரீர யாகத்தைச் சாஸ்த்ர விதிப்படி நடத்தித் தங்கள் கடமையை நன்கு நிறை வேற்ற ஆஸ்திகர்கள் ச்ரத்தைகொள்ளவேண்டும்.

அபரகர்மாவில் சிகாதாரணம் அவச்யம்.

நமது வைதிக கர்மாக்களுக்குச் சிகாதாரணம் ஓர் முக்ய அங்கமாக விதிக்கப் படுகிறது. அதிலும் அபரகர்மாக்களில் சிகையின் ஸம்பந்தம் விசேஷமாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஸூத்ரங்களும் ஸ்ம்ருதிகளும் அபர ப்ரயோகங் களில் சிகையை ஸம்பந்தப்படுத்தியிருப்பதைத் தீக்ஷிதீயத்தில் காணலாம். யஜ்ஞோபவீதம் எப்படி ப்ராம்ஹணனுக்கு முக்யமோ, கர்மாக்களுக்கு அங்கமோ, அதுபோல் சிகையும் சிகாதாரணமும் அங்கமாகிறது. யஜ்ஞோபவீதமில்லாமல் கர்மா நிறைவேறுதென்பதை நாம் அறிந்திருப்பதுபோல், சிகையில்லாமல் போனாலும் கர்மா ஸபலமாகிறதில்லையென்பதை ஆஸ்திகர்கள் அறியவேண்டும். க்றிஸ்தவாதி அன்னிய மதஸ்தர்களிடமிருந்து இரவல் வாங்கிய க்ராப் துரா சாரத்தினால் நமது மாதா பிதாக்களுடைய பரலோக ஹிதத்தை நாம் கெடுப்பது தர்மமா? நமது ஸொந்த மதத்தில் நமக்கு அபிமானம் வேண்டாமா? நமது பெரியோர்களான மஹர்ஷிகளின் உபதேசத்தில் மதிப்புவேண்டாமா? அபர கார்யங்களுக்கு அங்கமாக விதிக்கப்பட்ட சிரோவபனம் ஸர்வாங்கவபனம் இவை களை க்ராப் அபிமானத்தால் விட்டுவிடுகிறார்கள். ஆசௌசம் கேசேஷ்வலீயதே என்று சாஸ்த்ரமானது, சாஸ்த்ரீய க்ஷௌரம் செய்துகொள்ளாவிட்டால் ஆசௌச மானது அந்தக் கேசங்களில் மறைந்துநின்று அசுத்தியை உண்டாக்குமென்று சொல்லப்படுகிறது. ஆகையால் க்ராப்பில் அபிமானமுள்ளவராயிருந்து அதை எடுக்க மனமில்லாதவராயிருந்தாலும் மாதா பிதாக்களுடைய கர்மாவானது சாஸ்த்ரீயமாக நிறைவேறும்பொருட்டு அபரகர்மா முடியும் வரையிலாவது ஆஸ்திகர்கள் க்ராப்பை எடுத்துவிடுவது ச்ரேயஸ்கரமாகும். அந்தக் கர்மாவும் ஸபலமாகும்.

ச்ராத்தப் பிரிவுகள்.

இவ்வாறுகத் தீக்ஷிதிய ச்ராத்தகாண்டத்தின் பூர்வபாகத்திலுள்ள விசேஷங்களில் சிலவற்றை இதுவரை விவரித்தோம். இதற்குமேல், இரண்டாவது பாகத்தில் நித்ய, நைமித்திக, காம்யாதிகளான பற்பலவித ச்ராத்தங்களையும், அவைகளின் ப்ரயோகாதிகளையும் அவைகளின் மஹிமைகளையும் தீக்ஷிதீயம் விவரித்துக் கூறுகின்றது. ப்ரத்யாப்திகம், தர்சம், மஹாளயம், ஸங்க்ரமணம், அஷ்டகாந்வஷ்டகை போன்ற நித்யங்களான ச்ராத்தங்களும், மன்வாதி யுகாதி ச்ராத்தங்களும், அப்யுதயமென்கிற நாந்தீ ச்ராத்தம் முதலியவைகளும் விசேஷித்துச் சொல்லப்படுகின்றன. அன்னம், ஹிரண்யம், ஆமம் ஆகிய த்ரவ்யங்களைக்கொண்டு அந்தந்த ச்ராத்தங்களுக்கு நியமமும் காணப்படுகிறது.

எதைச் செய்யாவிட்டால் தோஷமும், ப்ராயச்சித்தமும் ஏற்படுகிறதோ அது நித்யமென்று சொல்லப்படுகிறது. இதில் மாதா பிதாக்கள் இறந்த தினத்தில் செய்யவேண்டிய ச்ராத்தமானது நித்யமாகையால் அதைக் கட்டாயமாகச் செய்துதீரவேண்டியதென்றும், இல்லையேல்

“ஶ்ரூதாஹம ஸ்ம்ருதிக்ருத் உண்ணாஹ: கொபிஜாயதே”

இத்யாதிகளால் மிக ப்ரபலமான தோஷம் கூறப்படுகிறதென்றும், ச்ராத்தம் செய்யாதவன் பாபியாவதுடன் அவனுடன் எவ்வித ஸம்ஸர்க்கமும் செய்யக் கூடாதென்றும், அவன் வைதிக மதத்திலிருந்து பதிதனுவான் என்றும் தீக்ஷிதீயம் சாஸ்த்ர வசனங்களைக்கொண்டு நிரூபித்துள்ளது.

மேலும் பித்ருதேவர்களுடைய சாபங்களும் ஏற்பட்டுக் குடும்ப க்ஷேமக் குறைவுகள் ஏற்படுமென்பதையும் சாஸ்த்ரம் வற்புறுத்துகிறது.

ஸ்ரீராமன் அனுஷ்டித்துக்காட்டியது.

ஆதலால்தான் ஆஸ்திக மதமான நமது வைதிக மதத்தை ஸம்ஸ்தாபனம் செய்ய அவதரித்த ஈச்வராவதாரமான ஸ்ரீராமாதி தெய்வமூர்த்திகளும், தபோ மஹிமையால் ஸகல லோகங்களையும் ப்ரத்யக்ஷீகரித்த மஹர்ஷிகளும், ஆசார்ய அவதாரங்களும், ச்ராத்த கர்மாவை ஆவச்யமென்று உபதேசித்ததுடன் தாங்களும் அனுஷ்டித்து உலகத்தாருக்கு வழிகாட்டினர்கள்.

தர்ம ஸ்தாபனார்த்தமவதரித்த ஸ்ரீ ராமன் சித்ரகூடத்தில் பரதனிடமிருந்து தசரதரின் நிர்யாணத்தை அறிந்து உடனே பிண்டோதகாதி அபரகர்மாக்களை அனுஷ்டித்தார். மந்தாகினீ நதியில் தசரதரின் த்ருப்திக்காக உதகதானம் அதாவது தர்ப்பணம் செய்து, பிறகு இங்குதீ வ்ருக்ஷ பலத்தினால் பிண்டதானமும் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏ! பிதாவே, தசரதரே! என்னால் ஸமர்ப்பிக்கப்பட்ட இந்த உதகதானத்தையும் பிண்டதானத்தையும் பித்ருலோகவாஸியான நீர் பெற்று த்ருப்தியடைய வேண்டும்” என்றும் ஸ்ரீ ராமன் ப்ரார்த்திப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. “ஏதத் தே தத” என்கிற இந்த ச்ராத்த மந்த்ரத்தையே “தத வஸ்தத்தே ஹவத” இதி என்று ஸ்ரீ ராமன் சொன்னதாக வால்மீகி குறித்துக் காட்டியிருக்கிறார்.

ஸனதத்தை ராஜரூஷுமை விஷயம் தொயஷேயழி । விதூ
மொகூமதவ்யாஹூ ஷேதுஷி-வ திஷ்டது ॥ ஷேம ஹு-ஹ்-கூஷ்வ
ஷேஹாராஜ வீ்ரதஃ'

என்று ப்ரார்த்திக்கிறார். தர்ப்பத்தில் வைக்கப்பட்டிருந்த இங்குதீ பிண்டத்தைப் பார்த்த கௌஸல்யாதி தேவிகள் "மஹாராஜாதிராஜனை தசரதர் இங்குதீ பிண்டத்தைப் புஜிக்கும்படியான நிலைமை ஏற்பட்டதே" என்றும் வருந்தியதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஜடாயுவுக்கு ஸ்ரீ ராமன் தஹன கர்மாவையும், பிண்டோதக தானகர்மாவை யும் தாமே செய்துகாட்டி, ஜடாயு உத்தம புண்யலோகங்களை அடையவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறதையும் கவனிக்கவேண்டும்.

ஜாபாலி மதம் அல்லது நாஸ்திக வாதம்.

இக்காலத்தில் ஜாபாலிமதம் வெகு ஸுலபமாகச் சிலர் மனதில் ஊசலாடுகிறது. லோகாயதிக நாஸ்திகக் கொள்கையுள்ளவர் அபரகர்மம், ச்ராத்தம் இவைகளைப் பரிஹஸிக்கின்றனர். "இந்தலோகத்தில் போடப்படும் அன்னம் பரலோகத்திற்குப் போகுமா? இறந்து போனவர்கள் இதை எப்படிச் சாப்பிடமுடியும்?" இத்யாதி களான துராக்ஷேபங்கள் செய்வது ஸஹஜம். இந்தக் கக்ஷியைத்தான் ஜாபாலி ஸ்ரீராமனிடம் சொல்லிப் பார்த்தார். இந்த நாஸ்திக வாதத்தைக்கேட்டு அபரி மிதமான கோபம் அடைந்த ஸ்ரீ ராமன் ச்ராத்தாதி தர்ம தத்வங்களை விளக்கியும் நாஸ்திகவாதத்தைக் கண்டித்தும் உபதேசித்தார். இவ்வளவு நாஸ்திகவாதம் செய்கிற ஜாபாலியைத் தசரதர் ஏன் தேசப்ரஷ்டம் செய்யாமல் தம் தேசத்தில் வலிக்க ஸம்மதித்தாரென்று ஆச்சர்யமும் ஆத்திரமும் அடைந்தார்.

இம்மாதிரி கணக்கற்ற அநுஷ்டானங்களும் உபதேசங்களும் ச்ராத்தத்தைப் பற்றி நமது ஸ்ம்ருதி புராணேதிகளில் காணப்படுகின்றன. நமது முன்னோர்கள் வெறும் மூடநம்பிக்கையால் இதைச் செய்தார்களென்று வாதிக்க முடியுமா? தசரதரே! இந்தப்பிண்டம் உமக்கு. இதை நீர் புஜித்து த்ருப்தியடையவும், என்று ஸ்ரீ ராமன் ப்ரார்த்திக்கிறாரே! இறந்த தசரதர் எங்கே இருக்கிறார்? அவர் இந்த ஹவிஸ்ஸால் த்ருப்தியடைகிறாரென்பது எப்படித் தெரிகிறது? ஸ்ரீ ராமன் இதை எப்படி நம்பினார்? தெய்வாவதாரமே இதை நம்பிச் செய்வதால் நாம் ஏன் ஸம்சயப்படவேண்டும்? ஜடாயுவின் இறந்த சரீரத்தைப் பார்த்து, ஜடாயுவே! உமக்கு இந்தத் தஹன ஸம்ஸ்காரத்தினால் உத்தம லோகங்கள் கிடைக்கும், என்று இறந்த சரீரத்தைப் பார்த்து ஸ்ரீ ராமன் சொல்லுவது பொருந்துமா? ஆதலால் பரலோகம் உண்டு. பித்ருதேவதைகள் உண்டு. இங்குப் புத்ராதிகள் செய்யும் ச்ராத்தாதி கார்யங்களால் அவர்கள் த்ருப்தியடைகிறார்கள். இத்யாதிகள் உறுதி யென்பதைக் காட்டவே ஸ்ரீ ராமனுடைய அநுஷ்டானத்தை விவரித்தோம்.

எல்லா மதங்களிலும் ச்ராத்தம் உண்டு.

இது முற்றிலும் அப்ரத்யக்ஷ விஷயமாகையால் சாஸ்த்ர ப்ரமாணமொன்று தான் கதியாகும். ஆஸ்திகர்களுக்கு அதுவே போதும். இதில் நாஸ்திகவாதம்

செய்கிறவர்களை த்ருப்தி செய்யமுடியாது. ஆனல் அத்தகைய நாஸ்திகவாதி களுக்கு இவ்வுலகில் எங்குமே இடமில்லை. ஏனெனில் மனித உலகத்திலுள்ள ஸகல மதங்களும் ஜாதிகளும் இறந்த தினத்தை ஒருவாறு கொண்டாடியே வருகின்றன. ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு தனி முறை இருக்கலாம். ஆனல் இறந்த தினத்தைக் கொண்டாடாத மதமேயில்லை. க்றிஸ்தவர்கள், இறந்த தினத்தில் விடுமுறை பெற்று, சர்ச்சுகளில் ப்ரார்த்தனை செய்கிறார்கள். இறந்தவனுடைய ஸமாதி மீது புஷ்பம் வைத்தும் தூபம் சாம்ப்ராணி போட்டும் மர்யாதை செய்கிறார்கள். இறந்த தினத்தில் துக்கக்குறியாக கறுப்பு ஆடை அணிகிறார்கள். இம்மாதிரி பலவித சடங்குமுறை நடக்கிறது. மஹம்மதியர் களும் இறந்த தினச் சடங்குகளை மதரீதியாக மௌல்விகளைக் கொண்டு ஆசரிக் கிறார்கள். ஸமாதி ப்ரார்த்தனை முதலியவை நடக்கின்றன. இவ்வாறு சீக்கியர், பார்ஸி, பௌத்தர் போன்ற எந்த மதத்தினரும் இறந்த தினத்தை நினைவு படுத்திக்கொண்டு இறந்தவரை நினைத்து மர்யாதை செலுத்துவது வெகு ஸஹஜமாயுள்ளது. இதற்கு நாஸ்திகர்கள் என்ன பதில் கூறமுடியும்? இறந்த வருடைய ஸமாதி மீது புஷ்பாதிகள் வைத்து மர்யாதை செய்வதால் யாருக்கு த்ருப்தி? இறந்தவருக்கு இது த்ருப்தி செய்வதென்பது மூடநம்பிக்கையல்லவா? இதை நேரில் பார்த்தவர் எவர்? ஆகையால் எல்லா மதங்களும் சாஸ்த்ர நம்பிக்கையைத்தான் கதியாகக் கொள்ளவேண்டும். யுக்திவாதம் நிலைத்து நிற்காது.

வைதிக மதத்தின் கொள்கை.

இவ்விஷயமாக வைதிக மதத்தின் ஸித்தாந்தமென்னவென்பதை தீக்ஷிதீயம் நிர்ணயித்திருப்பதை ச்ராத்தகாண்டத்தில் காணலாம். தீக்ஷிதர் நிர்ணயிப்ப தாவது:—

"மனிதர்கள் தங்களுடைய புண்ய பாப கர்ம வசத்தினுல் ஸ்வர்க்க நரகாதி பற்பல லோகங்களில் வஸிக்க நேரலாம். அவ்வளவு தூர லோகாந்தரத்தில் இருக்கும் அவர்கள், புத்ராதிகள் இங்கு ஸமர்ப்பிக்கும் அன்ன பானதிகளைப் புஜிக்கமுடியாது. அதனுல் த்ருப்தியும் அடையமுடியாது. த்ருப்தியடைந்தாலும் அவர்கள் புத்ராதிகளுக்கு உத்தம போகங்களை அளிக்கச் சக்தியோ, அதிகாரமோ ஏது? அவர்கள் மனிதர்கள்தானே? தேவதைகளல்லவே?

இவ்வாறு ஓர் ஆசங்கையைத் தீக்ஷிதர் கிளப்பிக்கொண்டு யாஜ்ஞவல்க்ய விஜ்ஞானேச்வரர் கூறியுள்ள ஸித்தாந்தத்தை வெளியிட்டு, ஸந்தேஹ சாந்தி செய்திருக்கிறார். அதாவது:— பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹாதிகள் பரலோகத் தில் தனித்து நிற்பதில்லை. வஸு, ருத்ர, ஆதித்யர் என்கிற தேவர்களுடன் ஒன்றுக ஐக்யமாகி விடுகின்றனர். ஒருவனைத் தேவதத்தனென்று கூறும்போது அவனது சரீரம், ஆத்மா இரண்டும் சேர்ந்தே வ்யவஹரிக்கப்படுகிறது. பிரிந்து நிற்பதில்லை. அதுபோல் பித்ருக்கள் என்று சொன்னுல் வஸு ருத்ராதி தேவர் களும் சேர்ந்தேயிருக்கும். பிரிந்து நிற்காது. அந்த வஸு ருத்ராதி தேவர்கள் ச்ராத்தாதிகளால் ப்ரீதியடைந்து புத்ராதிகளுக்கு உத்தம லோகாதி க்ஷேமங் களையும் கொடுக்கிறார்கள். வஸ்வாதி தேவகணங்களில் நமது பித்ருக்கள் பிரிய

முடியாமல் கலந்து தேவர்களாகிவிடுகிறார்'' என்று தீக்ஷிதீயம் உபபாதனம் செய்துள்ளது. அந்த வாக்யங்களைத் தீக்ஷிதீயத்தில் காண்க.

பித்ருக்களுக்குப் போய்ச் சேருகிறது.

மேலும் இங்குப் புத்ராதிகள் கொடுக்கும் ஹவிஸ்களை மந்த்ர சக்தியானது பித்ருக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறது என்று வ்யாஸருடைய வசனத்தை தீக்ஷிதீயம் வெளியிடுகிறது.

ஸவவம ஸ்ராத்தஸ்ய ஹவிஷ்ய ஸ்ய தேவாயதே வித்யாது, என்று.

மேலும் நாமம், கோத்ரம் முதலியவைகளுடன் கொடுக்கப்படும் ஹவிஸ் பித்ருக்கள் கர்ம வசத்தால் வெவ்வேறுவித ஜந்மங்களைப் பெற்றவர்களாயிருந்தாலும் அவர்களிடம் போய்ச் சேருகிறது. நமது பித்ருக்கள் தேவர்களாயிருந்தால் நாம் கொடுக்கும் ஹவிஸ் அம்ருத ரூபமாகப் பரிணமித்து அவர்களிடம் போய்ச் சேருகிறது. கர்ம வசத்தால், பசு பக்ஷி ஜந்மம் பெற்றிருந்தால், புல், ஜலம் முதலிய ரூபமாக ஹவிஸ் பரிணமித்து அவர்களிடம் போகிறது. இன்னும் இம்மாதிரி அவர்கள் எந்தெந்த ஜந்மமாக மாறியிருந்தபோதிலும் அததற்கு ஏற்ற ஆஹாரமாக மாறி ச்ராத்த ஹவிஸ் த்ருப்தி செய்துவைப்பதாகப் பல வசனங்களைக் காட்டி தீக்ஷிதீயம் உபபாதிக்கிறது.

ஸீதாதேவியின் அனுஷ்டானம்.

அசோகவனத்தில் அடைபட்டுக்கிடந்த ஸீதாதேவிக்கு ஆஹாரார்த்தம் இந்த்ரன் ரஹஸ்யமாக ப்ரதிதினமும் கொடுக்கும் அன்னத்திலிருந்து ஒரு சிறிய பாகத்தை ராம லக்ஷ்மணர்களுடைய ப்ரீதியை உத்தேசித்து அவர்கள் பெயரை உச்சரித்துப் பூமியில் வைத்துவிட்டுப் பிறகுதான் அவள் ஆஹாரம் புஜிப்பாள்.

ஸுஸ்ரூஷதீ ராமாய ஹ்யேதன்னிவேதயேதி । யதி
ஜீவதி ஸ ஹதோ வாக்ஷணைர வஹ்ரூயாஃ ॥ அதவாப்ய
ஹ்யேதாவ்ரூவி தயோரஸ்ம வக்ஷ்யதி’ ॥

“ராம லக்ஷ்மணர்கள் ஜீவித்திருந்தாலும், அல்லது பரலோகம் சென்று தேவத்வத்தை அடைந்திருந்தபோதிலும், அவர்களுக்கு ப்ரீதிகரமாய் இந்த அன்னம் போய்ச் சேரட்டும்'' என்று ஸீதை ப்ரார்த்தித்திருக்கிறாள் என்று புராணாந்தரங்களில் காணப்படுகிறது. ஆரண்ய காண்டத்திலும் ஒரு ஸர்க்கத்தில் (ப்ரக்ஷிப்தம்) இது சொல்லப்படுகிறது.

வேதாந்திகளின் ஸித்தாந்தம்.

மேலும் வைதிக மதத்தில் மற்றொரு தத்வம் வேதாந்தாதிகளிலும், கீதாதிகளிலும் நிர்ணயிக்கப்பட்டிருப்பதையும் ஆஸ்திகர்கள் கவனிக்கவேண்டும். நாம் செய்யும் எந்தக் கர்மாவிலும், அக்நி, இந்த்ராதி தேவர்களையும், வஸு ருத்ராதி பித்ரு தேவர்களையும் உத்தேசித்து ஹோம, பிண்டாதிகள் செய்த

போதிலும், அவைகளால் அக்நீந்த்ராதி தேவர்கள் மூலமாகவும், வஸு ருத்ராதி பித்ருக்கள் மூலமாகவும் ஸர்வாந்தராத்மாவான ஸாக்ஷாத் பகவானே த்ருப்தி யடைந்து, அந்தந்தத் தேவதைகள் மூலமாகப் பலன்களையும் அளிக்கிறார், என்கிற விஷயம் கீதையில் வெகு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகையால் ச்ராத்தாதி களால் பித்ரு பிதாமஹாதிகளின் பெயரைச் சொல்லி அவர்களுக்கும் அந்தர்யாமி யான பகவானையே ஆராதிக்கிறோம், என்ற அபிஸந்தி உறுதியாக இருக்க வேண்டியது அவச்யம். பித்ரு பிதாமஹாதிகள் பகவத் ஸ்வரூபிகள் என்ற தத்வ ஜ்ஞானம் வேண்டும், என்று கருத்து.

'பெ யஜ்ஞே வித்வாநு ஜெவாநு வ்ருத்வாநு ஸ ஹ்ருதாஸுநாநு।
ஸவ்ருஹ்ருதாஜ்ஞாதாநம் விஷ்ணுமேவ யஜ்ஞே தே ॥'

என்ற யம ஸ்ம்ருதி வசனத்தை தீக்ஷிதர் உதாஹரித்து இதை விசதம் செய்கிறார்.

'ஸவ்ருஜெவநமஸ்காரஃ கேஸவம் ப்ரதிகச்ச்ஹதி'

என்ற தத்வம் வைதிகர் யாவரும் அறிந்ததே. எந்தத் தேவதையை நமஸ் கரித்தாலும் ஸர்வாந்தராத்மாவான பகவானிடமே அந்த நமஸ்காரம் போய்ச் சேருகிறது. ஆகவே ச்ராத்தாதிகளைப் பித்ரு பிதாமஹாதிகளின் அந்தர்யாமி யான பகவானுடைய ஆராதனமென்று நினைக்கும்படி சாஸ்த்ர உபதேசம்.

ச்ராத்த ஹோம பலன்.

ச்ராத்தத்தில், ஹோமம், ப்ராம்ஹண போஜனம், பிண்டதானம் ஆகிய மூன்றும் ப்ரதான அங்கிகள். வைதிகமத ஸித்தாந்தத்தின்படி அக்நியில் நாம் செய்யும் ஹோமங்களை அந்தந்தத் தேவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பது அக்நியின் கார்யமாகும். இதனால் அக்நிக்கு "ஹவ்யவாஹனன்" என்ற காரணப் பெயர் ச்ருதிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பித்ரு தேவர்களுக்கான ஹவிஸ் களுக்கு "கவ்யம்" என்ற பெயர் உண்டு. ச்ராத்த ஹவிஸ்களை ஸூக்ஷ்மரூபமாகப் பித்ருக்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதால் அக்நிக்கு "கவ்யவாஹனன்" என்ற பெயரும் ச்ருதியில் காணப்படுகிறது. பொதுவாகவே நமது மதத்தில், நாம் செய்யும் ஹோமங்கள் ஸூக்ஷ்மரூபமாக ஸூர்யனிடம் போய்ச் சேருவதாக மனு முதலியவர்கள் கூறுகிறார்கள்.

ஸூர்ய ப்ராணாஹுதிஸ்ருஷ்டோ தூமோ ராத்ரிம் ததோ(அ)பி ஹ்ருதி।

ப்ருஹதாரண்யக பாஷ்ய வ்யாக்யானத்தில் ஸ்ரீ ஆநந்தகிரி ஆசார்யரும் ஒரு ச்ருதியைக் காட்டியுள்ளார்.

தே வா ஏதே ஸூர்ஹுதே ஹுதே நிஷ்க்ராந்தாஃ தே
ஸூக்ஷ்மீக்ருதாவிஸ்தாஃ ॥

"அக்நியில் செய்த ஆஹுதியானது ஸூக்ஷ்ம ரூபமாக வெளிப்பட்டு அந்த ரிக்ஷத்திற்குப்போய்ச் சேருகின்றது." இத்யாதிகளாக அநேக ப்ரமாணங்களும், உறுதியான கொள்கைகளும் வைதிகமதத்தில் இருக்கின்றன. நவீனகால ஸயன்ஸ்

காரர்களும் இந்த உண்மையை உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் ச்ராத்தங்களில் நாம் செய்யும் ஹோமம் பித்ருக்களுக்கு த்ருப்தி கொடுப்பவை யென்பது உறுதி.

ப்ராம்ஹண போஜன மஹிமை.

ச்ராத்தத்தில் ப்ராம்ஹண போஜன முகமாகப் பித்ருக்களை த்ருப்தி செய்யும் படி விதிக்கப்படுகிறதை நாம் கேவலம் லௌகிக த்ருஷ்டியால் மாத்ரம் கவனிக்கக் கூடாது. நமது ச்ருதி ஸ்ம்ருதி புராணேதிகளில் எங்கும் ப்ராம்ஹண மஹிமை அனந்தமாகக் காணப்படுகிறது. ப்ரம்ஹா, விஷ்ணு, சிவாதி தேவர்களும், அவதார மூர்த்திகளான ராமக்ருஷ்ணாதி தேவர்களும், ருஷிகளும், ஆசார்யா வதாரங்களும் மற்றும் ஸகலப் பிரிவினரும் ப்ராம்ஹண மஹிமையைக் கொண் டாடுவதை நமது க்ரந்தங்களிலும், சரித்திரங்களிலும் கணக்கற்றுக் காண்கிறோம். இக்காலத்தில் சிலர் எரிச்சல் படுகிறதை நாம் கவனிக்க வேண்டியதில்லை. ப்ராம் ஹண மஹிமையை நாம் கவனிக்கும்போது இக்காலத்தில் கலிதோஷத்தால் ஸ்வரூபமிழந்து தபஸ்ஸை இழந்து சிறுமைப்பட்டு நிற்கும் நவீன காலத்தியவர் களை மறந்து, மஹாதபஸ்விகளும், யோகசக்தி பெற்றவர்களும், அமானுஷ சக்தி பொருந்தியவர்களுமான ப்ராசீன ப்ராம்ஹண ச்ரேஷ்டர்களை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். கலிதோஷத்தில் சிக்கிய இக்காலத்திய ப்ராம்ஹணர்களிடம் கூட ஓர் தனிச்சிறப்பு இருப்பதை உலகம் ப்ரத்யக்ஷத்தில் கண்டு அநுபவிக்கிறது. ப்ராசீனர்களுடைய பாரம்பர்ய ரக்த ஸம்பந்தாதிகளின் மஹிமையே இது.

ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய பகவான் பூலோகத்தில் தர்மங்களைக் கண்காணித்துப் பாதுகாக்க ப்ராம்ஹணர்களைத் தெய்வாம்சம் கொடுத்து ஸ்ருஷ்டித்ததாக நமது மன்வாதிகள் கூறுகின்றனர்.

ׂமஸ்ஸுஸ்ஸுவ-ஹ-தா நாம யதி-கொஸ்ஸு முவுயெ'

"தர்மமென்கிற பொக்கிஷத்தை ரக்ஷிப்பதற்காக ப்ராம்ஹணன் ஸகல ப்ராணிகளுக்கும் ஈச்வரனை ஸ்ருஷ்டிக்கப்பட்டான்" என்று மனு கூறினார். ச்ருதி கூறுகிறது.

ׂவரொக்ஷம் வா கெநு தெவா ஜ்யுதெ । ப்ரத்யக்ஷிநு ।
வநதெ வெ தெவாஃ ப்ரத்யக்ஷா । யப்ராஹ்மணாஃ ॥'

நாம் செய்யும் கர்மாக்களில், கண்ணுக்குப் புலப்படாத சில தேவதைகள் பூஜிக்கப்படுகிறார்கள். கண்ணுக்குப் புலப்படும் சில தேவதைகளும் பூஜிக்கப் படுகிறார்கள். அந்த ப்ரத்யக்ஷ தேவர்கள் யார்? ப்ராம்ஹணர்கள்தான்.''

ׂப்ராஹ்மணொ வெ ஸவ-ா தெவதாஃ'

ப்ராம்ஹணன் ஸகல தேவதா ஸ்வரூபியாவான்.

ׂயாவதீவெ-ா தெவதாஸ்ஸவ-ா வெஷ்டி ப்ராஹ்மணெ வஸதி'

தேவலோகத்தில் எவ்வளவு தேவதைகள் இருக்கிறார்களோ அவர்கள் யாவரும் வேதவித்தான ப்ராம்ஹணனிடம் வஸிக்கிறார்கள். இத்யாதி ச்ருதிகளை அனுஸரித்து ஸகல ஸ்ம்ருதிகளும், ஸகல புராணங்களும் ப்ராம்ஹணர்களைப் பூலோக தேவர்களென்று ஒருமுகமாகக் கூறுகின்றன. "விப்ரர்கள் பூமிதேவர்களாக ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று உமாமஹேச்வர ஸம்வாதத்தில் ஸ்ரீ மஹேச்வரன் கூறுகிறார்

'ப்ராஹ்மணா தைவதம் மஹத் । பரமம் தைவதம் ஹி ஸஃ'

என்று பரம தைவமாக விஷ்ணு மஹேச்வராதிகளே கௌரவிக்கிறார்கள். ஸ்ரீ ராமாயண பாரத பாகவதாதிகளில் ஸ்ரீ ராமக்ருஷ்ணாதிகள் ப்ராம்ஹணர்களிடம் தேவதாபக்தி செய்யுமிடங்கள் கணக்கில்லாமல் காணலாம். ஆழ்வார்கள், நாயன்மார்கள், கம்பர் போன்றவர்களும் ப்ராம்ஹணர்களை "நிலத்தேவர்கள்" என்றும், பூஸுரர்கள், பூதேவர் இத்யாதிகளாலும் வ்யவஹரிப்பதை எங்கும் பார்க்கிறோம்.

ஆகையால் ச்ராத்தங்களில் ப்ராம்ஹணர்களின் உதரத்தில் நாம் செய்யும் போஜனரூபமான ஹோமமானது ஸாக்ஷாத்தாகத் தேவபித்ரு ரூபிகளான தேவர்களின் முகத்திலேயே ஹோமம் செய்வதாகும். இதையும் நமது ஸ்ம்ருதி புராணாதிகள் வெகு தெளிவாக வெளியிடுகின்றன.

"தேவலோகவாஸிகளான தேவதைகள் யாவரும் ப்ராம்ஹணன் முகத்தாலேயே ஹவ்ய கவ்யங்களைப் புஜிக்கிறார்கள். அந்த ப்ராம்ஹணனைவிட உயர்ந்த தெய்வம் எப்படி யிருக்கமுடியும்?" [மனு.]

"ஆதித்யன், சந்த்ரன், விஷ்ணு, ப்ரம்ஹா, சங்கரன் ஆகிய தேவர்கள் யாவரும் ப்ராம்ஹணனை ஆச்ரயித்தே அந்நஹவிஸ்ஸைப் புஜிக்கிறார்கள்."

"ப்ராம்ஹண முகத்தில் செய்யப்படும் ஹோமமானது, சிந்திப்போவதில்லை, குறைந்து போவதில்லை. அக்நிஹோத்ர ஹோமத்தைவிட ப்ராம்ஹண முகத்தில் செய்யும் ஹோமம் உத்க்ருஷ்டமாகும்."

"ப்ராம்ஹணர்கள் புஜிக்காததைப் பித்ருதேவதைகள் புஜிப்பதில்லை."

"பித்ருதேவதைகளின் த்ருப்திக்காக ப்ராம்ஹண போஜனம்."

"ஹவ்ய, கவ்யங்களைத் தேவர், பித்ருக்களுக்காக ஏற்றுக்கொள்வதற்காகவே ப்ராம்ஹணன் ஸ்ருஷ்டிக்கப்பட்டான்."

இத்யாதிகளான புராணாதிகளில் ப்ரம்ஹா, விஷ்ணு, மஹேச்வராதி தேவர்களே ப்ராம்ஹணர்களின் மஹிமையைக்கூறி முக்யமாகப் பித்ருகார்யங்களில் தேவதாஸ்வரூபிகளாயும், தேவதைகளின் ப்ரதிநிதிகளாயுமுள்ள ப்ராம்ஹணர்களைப் போஜனம்செய்துவைக்க வேண்டியதை வற்புறுத்தியுள்ளதைப் பார்க்கவும். ப்ராம்ஹண போஜனமும் அக்நிஹோமம்போல் ஹோமமாகவே கூறப்படுகிறது.

இக்காலத்தில் ப்ராம்ஹண ஸமூஹத்தினருக்கே, நிமந்த்ரித ப்ராம்ஹணர்களிடத்தில் மனிதன் என்ற அலக்ஷ்யபுத்தி ஏற்பட்டு வருவதால் அவர்கள்

சாஸ்த்ர உண்மைகளை அறியவேண்டி இவ்வளவுதூரம் நிருபிக்க நேர்ந்தது. இக்காலத்தில் முன்போல் உயர்ந்த ப்ராம்ஹணர்களும் வேதாத்யயன ஸம்பந்நர் களும் ச்ராத்தத்திற்கு கிடைக்காமல் போனாலும் காயத்ரீ மாத்ர லித்திபெற்ற வர்கள் போதுமென்று மன்வாதிகள் சொல்லும் ஸமாதானத்தைத் திக்ஷிதீயம் உறுதிப்படுத்தியுள்ளது.

ச்ராத்த கர்ம மஹிமை.

ச்ராத்த மஹிமை பற்றித் தீக்ஷிதீயத்தில் கூறுவதின் ஸாரமாவது:-"ச்ராத்த கர்மாவை விட மனிதனுக்கு ச்ரேயஸ்கரமான உயர்ந்த கர்மா வேறு கிடையாது. ஆகையால் ஸர்வவித முயற்சியாலும் ச்ராத்தத்தைச் செய்து தீரவேண்டும்.

ஆரோக்யம், தீர்க்காயுஸ், புத்ரபௌத்ராதி ஸந்ததி, தனதான்யாதி ஸம்ருத்தி இவைகள் ச்ராத்த கர்த்தாவுக்கு ஏற்படுகின்றன. பரலோகத்திலும் பல உயர்ந்த ஸ்தானங்கள் கிடைக்கின்றன. பித்ருக்களைப் பூஜிப்பதால் ஆயுஸ், புத்ரன், ஸ்வர்க்கம், புஷ்டி, பலம், ஸ்த்ரீ, பசு, ஸுகம், தனதான்யாதிகள் ஏற்படு கின்றன. "இவ்வளவு மஹிமையுள்ள ச்ராத்தத்தைச் செய்வதால் அம்ருதத்வத்தை அடைகிறான்."

ச்ராத்த கர்மாவைச் செய்யாவிட்டால், குலஸந்ததி வ்ருத்தியாகாது. ஆரோக்யம், தீர்க்காயுஸ் ஏற்படாது. வேறு பலவித ச்ரேயஸ்களும் கிடைக்காது. பித்ரு தேவதைகளின் சாபமும் ஏற்படும். "பித்ரு பிதாமஹாதி தேவர்கள் கிடையாதென்ற நாஸ்திக எண்ணத்தால் ச்ராத்தத்தை த்யஜித்தவனுடைய ரக் தத்தை அவர்கள் பானம் செய்கிறார்கள்." "நாமம் கோத்ரம் உச்சரித்துப் பித்ருக் களுக்குப் பிண்டதானம் செய்வதால் இருவரும் சாச்வதமான பரப்ரம்ஹத்தின் ஸாயுஜ்யத்தை அடைகிறார்கள்" இத்யாதிகள். புராணேதிகளிலிருந்தும் அபார மான மஹிமையை அறியவும்.

கட்டாயமாக அனுஷ்டிக்கவேண்டியவை.

இறந்த தினத்தில் செய்யப்படுகிற ச்ராத்தம் ப்ரத்யாப்திகம். அது ம்ருதாஹ சராத்தமாகும். இதை எவ்வளவு ச்ரமம் இருந்தபோதிலும் முக்ய கல்பமாகவே, அதாவது அந்ந ரூபமாகவே செய்யவேண்டும். ப்ரதிநிதியில் செய்யக் கூடா தென்று தீக்ஷிதீயத்தில் காண்கிறது. தர்சம், மஹாளயம், ஸங்க்ரமணம், அஷ்டகை, போன்ற மற்ற நித்ய ச்ராத்தங்களை ஹிரண்யம், ஆமம், தர்ப்பணம் ஆகிய ப்ரதிநிதிகளில் ஏதாவது ஒன்றை அனுஸரித்தும் கௌணமாகச் செய்யத் தீக்ஷிதீயத்தில் அனுமதி காண்கிறது. ஸௌகர்யமிருந்தால் இவைகளையும் முக்ய கல்பமான அந்ந ரூபமாகச் செய்வது ச்ரேஷ்டமாகும்.

அஷ்டகாந்வஷ்டகை ச்ராத்தமானது நித்யமாகவும், செய்யாவிடில் தோஷ மேற்படுவதாயும் சாஸ்த்ர விதி காண்கிறது. ஆஸ்திகர்கள் கூடப் பலர் இந்த விதியை அறியாமல் அஷ்டகையை த்யஜித்து விடுகிறார்கள். தீக்ஷிதீயத்தை நன்கு பார்த்து யாவரும் இந்த நித்யகர்மாவை விடாமல் செய்து ச்ரேயஸ் பெறவேண்டும். அப்யுதயமென்கிற நாந்தீ ச்ராத்தத்தைப் பற்றியும் தீக்ஷிதீயத்தில் விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது. வைதிக கர்மாவில் எல்லாவித சுபகர்மாக்களிலும் பித்ரு பூஜையை ஆரம்பத்திலோ கடைசியிலோ செய்து தீரவேண்டும். இதைத்தான்

நாந்தீயென்றும், அப்யுதய ச்ராத்தமென்றும் கூறப்படுகிறது. இன்னும் இது போல் மந்வாதி யுகாதி போன்ற நைமித்திக-காம்ய ச்ராத்தங்கள் பலவற்றையும் தீக்ஷிதீயம் கூறியுள்ளது. யதாஸௌகர்யம், யதாஸம்ப்ரதாயம் இவைகளையும் ஈச்வர ப்ரீதிக்காக அனுஷ்டிக்கலாம்.

மாதாபிதாக்களின் உபகார ஸ்மரணம்.

உலகமெங்கும், லௌகிக ரீதியில், விசேஷ உபகாரம் செய்த பெரியோர்களுடைய பிறந்த-இறந்த தினங்களைக் கொண்டாடுவது வெகு ஸஹஜமாயிருக்கிறது. ராஜீய விஷயத்திலோ, ராணுவ விஷயத்திலோ, வித்யா விஷயத்திலோ, வேறு எந்த விஷயத்திலோ உலகுக்கு உபகாரம் செய்தவர்களுடைய இறந்த தினத்தைக் கொண்டாடி, கூட்டம் கூடி, நன்றி செலுத்துவதும் மரியாதை தெரிவிப்பதும் உபகார ஸ்ம்ருதியாகும். இக்காலத்தில் இது மலிந்து விட்டது. இந்த ரீதியில் பார்த்தாலும் மாதா பிதாக்களுடைய உபகார ஸ்ம்ருதியாக ச்ராத்த தினத்தைக் கொண்டாடலாம். மாதா பிதாக்கள் செய்துள்ள உபகாரமோ எல்லையற்றது, வாய்விட்டுச் சொல்ல முடியாது. தர்ம ஸாதனமான சரீரத்தை உத்பத்தி செய்வதுடன், சிசுப்பருவம் முதல் யௌவனம் ஆகும் வரையில் அவர்கள் புத்ரனுக்குச் செய்யும் ஊழியங்களையும் உபசாரங்களையும், அபிமானத்தையும் அளவிட்டுச் சொல்லமுடியுமா? மாதா பிதாக்கள் கவனிக்காவிட்டால் குழந்தைகளின் கதி என்ன?

யதாஶக்தி ப்ரதாநேந ஸ்நாபநாச்ஹாதநேந ச ।
ந ஸுப்ரதிகரம் தத்து மாத்ரா பித்ரா ச யத்க்ருதம் ॥

என்று மாதாபிதாக்களுடைய உபகாரத்திற்கு ப்ரதியுபகாரம் செய்வதென்பது அஸாத்யமென்றே கூறப்பட்டது. ஒவ்வொருவரும் இதைச் சிந்தித்துப் பார்க்கலாம். மாதா பிதாக்களை ப்ரதான ஆசார்யர்களாக மதிக்கும்படி மஹர்ஷிகளும் கட்டளையிட்டனர். ஆதலால் அந்த மஹோபகாரிகளை, நமது சாஸ்த்ரம் வகுத்த முறையில் நாம் த்ருப்தி செய்துவைத்து நமது கடனை, கடமையைத் தீர்த்து த்ருப்தியடைய ச்ராத்த கர்மாவானது மிக்க அவச்யமாகும்.

நாஸ்திகர்களும் செய்யவேண்டியதே.

பரலோக நம்பிக்கையில்லாத நாஸ்திகர்களும் ச்ராத்தாதி கர்மங்களைச் செய்துவிடுவது நல்லதென்றே நமது முன்னோர்கள் யுக்தி வாத ரீதியிலும் கூறினார்கள். ஒரு வழிப்போக்கன் ஒரு காட்டு வழியாகப் போக நேர்ந்தது. "காட்டில் துஷ்டப்ராணிகள் உண்டா? கையில் ஆயுதம் கொண்டு போக வேண்டுமா?" என்று ஓர் ஆப்தனைக் கேட்டான். துஷ்ட ப்ராணிகள் இல்லை. ஆயுதம் சுமக்க வேண்டாம் என்று அவன் கூறிவிட்டான். மற்றொரு ஆப்தன் துஷ்ட ஜந்துக்கள் ரொம்ப உண்டு. ஆயுதம் அவச்யம் என்றான். இந்த ஸந்தேஹ நிலைமையில் விவேகியான வழிப்போக்கன் கடமையென்ன? ஆயுதத்துடன் போகவே அவன் நினைப்பான். உண்மையில் துஷ்ட ப்ராணிகள் இருந்தால் ஆயுதம் கொண்டு போனது ஸபலமாகிறது. துஷ்டப்ராணிகள் இருந்து இவன் ஆயுதமும் கொண்டுபோகாமலிருந்தால் இவனுடைய கதி என்ன ஆகும்? துஷ்ட

ப்ராணிகள் இல்லையென்றே வைத்துக் கொள்ளுவோம். இவன் ஆயுதம் கொண்டு போனதால் இவனுக்கு எவ்வித கஷ்டமோ நஷ்டமோ ஏற்படுவதில்லையல்லவா?

ஹந்தி ஹை தா வரே லொகே ந காயஜீஹா வோயெ: ।
நாஸ்தி வேத நாஸ்தி நோ ஹாநி: சுஸ்தி வேத நாஸ்திகோ ஹத: ॥

பரலோகமிருப்பதில் ஸந்தேஹம் ஏற்பட்டபோதிலும் புத்திமானை மனிதன் அந்தத் தைர்யத்தால் தப்புக் கார்யங்களைச் செய்துவிடக்கூடாது. தர்மங்களை விடக்கூடாது. பரலோகமிருப்பதாகவே நினைத்து தர்மங்களைச் செய்துவிடுவது நல்லது. உண்மையில் பரலோகமில்லையானால் நாம் செய்த தர்மத்தால் நமக்குக் கெடுதியொன்றும் ஏற்பட்டு விடாது. பரலோகமிருந்து விட்டாலோ தர்மத்யாகம் செய்த நாஸ்திகன், ஆயுதமில்லாமல் துஷ்ட ப்ராணியிடம் அகப்பட்டுக்கொண்ட மனிதன் போல் வதைக்கப் படுவான். ஆகையால் ச்ராத்தாதிகளை நாஸ்திகனும் அனுஷ்டித்து விடுவது நல்லது.

எல்லா ஜாதியாருக்கும் உண்டு.

தீக்ஷிதீயமானது க்ஷத்ரிய-வைச்யாதி வர்ண தர்மங்களையும் விஸ்தாரமாகச் சொல்லுவதுபோல் நான்காம் வர்ணமான சூத்ர ஜாதி தர்மங்களையும் ஆங்காங்கு விவரித்துக் கூறியுள்ளது. சூத்ர வர்ணமானது வேதோக்தமான சாதுர் வர்ண்யத்தின் நான்காவது பிரிவு. அது வைதிக வர்ணம். அந்த வர்ணத்திற்கான தர்மங்களையும் நமது ச்ருதி ஸ்ம்ருதிகள் நிர்ணயித்துக் கூறியுள்ளன. அந்த வர்ணம் சேராமல் சாதுர்வர்ண்யம் பூர்த்தியாகாது. ஆகையால் அந்த வர்ணத்தின் தர்மங்களையும் சேர்த்தே நமது சாஸ்த்ரம் உபதேசிக்கிறது. தீக்ஷிதீயமானது சூத்ர வர்ணத்தின் தர்மங்களை அதாவது ஜாதகர்ம நாமகரணாதி ஸம்ஸ்காரங்களையும், ஆன்ஹிகம், ஸ்நானம், தானம், தேவபூஜை முதலியவைகளையும் வர்ணச்ரம காண்டத்திலும், ஆன்ஹிக காண்டத்திலும் உபபாதித்துள்ளது. இந்த ச்ராத்த காண்டத்திலும் அந்த வர்ணத்தின் அபர கர்ம, ஆசௌசம், ச்ராத்தம் இவைகளின் விதிகளையும் ஆங்காங்கு விவரித்துச் சொல்லுகிறது. ஆதலால் ஆஸ்திகர்களான நான்காம் வர்ணத்தினருக்கும் இந்த க்ரந்தம் மிகவும் உபயோகரமானது.

தீக்ஷிதரின் சரித்ரம்.

இச் சிறந்த நிபந்தன க்ரந்தத்தை எழுதி உபகரித்த ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் த்ராவிட தேசத்தைச் சேர்ந்தவரென்பதில் இத்தேச வைதிக ஸமூஹத்தினர் பெருமைப்படுவார்கள். திருக்குடந்தை ஸமீபமான நாச்சியார்கோவில் க்ஷேத்ரத்திற்கு அருகிலுள்ள கண்ட்ரமாணிக்கம் என்ற அக்ரஹாரத்தில் ஸுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் அவர் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஸகல சாஸ்த்ர நிபுணராயிருந்து ச்ரௌத ஸ்மார்த்த கர்மானுஷ்டான நிரதாயிருந்தார். அநேக யஜ்ஞங்கள் செய்தவர். அவர் இன்னும் சில க்ரந்தங்கள் இயற்றியிருப்பதாகக் கூறப்படுகிறதாயினும் அவை வெளிவராததால் நிச்சயம் கூறமுடியவில்லை. இவர் சரித்ர விவரங்களும் வெளிவரவில்லை. தெரிந்தவர்கள் அதை விவரித்துக் கூறுவது உபகாரமாகும்.

அக்நி ஹோத்ரம்,
கோபால தேசிகாசார்யர்.

ச்ராத்த காண்டம், பூர்வ பாகம்.

விஷய ஸூசிகை.

		பக்கம்
வ்யாதியுள்ளவனின் ஸ்நான விதி	...	2
புண்ட்ர விதி	...	3
பகவத் தீர்த்தத்தைப் பருகவேண்டும்	...	4
ஸர்வ ப்ராயஸ்சித்தம்	...	5
க்ருச்ரம், அதன் ப்ரதிநிதி இவைகளின் ஸ்வரூபம்	...	6
ஆபத் காலத்தில் வேறு கர்த்தாவை வரிக்கலாம்	...	9
அந்த்ய காலத்தில் பகவந் நாமத்தைச் சொல்லவேண்டும்	...	13
,, ,, மஹான்களின் தர்சனம்	...	13
சாகுந் தருணத்தில் இருப்பவன் தானங்களைச் செய்யவேண்டும்	...	14
தச தானங்களின் அளவு	...	16
அந்த்ய காலத்தில் ஜபிக்கவேண்டிய மந்த்ரங்கள்	...	17
கர்ண மந்த்ர ஜபம்	...	18
மரண தினத்தின் குண தோஷங்கள்	...	20
ஸம்ஸ்கார யோக்யதைக்காக க்ருச்ராசரணம்	...	24
ஊர்த்வோச்சிஷ்டாதி ப்ராயஸ்சித்தம்	...	25
பர்யுஷிதம்	...	29
இறந்தவன் மறுபடி பிழைத்தால் என்ன செய்வது	...	31
ராத்ரி மரணம் முதலியதில் ப்ராயஸ்சித்தம்	...	33
கர்த்ரு க்ரமம்	...	36
இரட்டைப் பிள்ளைகளுள் எவன் பெரியவன்	...	40
உபநயனம் ஆகாதவனுக்கும் மாதா பித்ரு ஸம்ஸ்காரத்தில் அதிகாரம்	...	47
தீக்ஷையின் மத்தியிலும் ,, ,,	...	52
கர்த்ரு க்ரமம்	...	54
ஔரஸன் முதலியவரின் லக்ஷணம், க்ரமம்	...	55
ரஜோ மத்யத்தில் பதி மரித்தால்	...	71

		பக்கம்
அக்னி நிர்ணயம்	...	89
அநேக பத்னிகள் இருந்தால் அக்னி நிர்ணயம்	...	103
ஆஹிதாக்னி தேசாந்தரத்தில் மரித்தால்	...	115
ப்ரேதாக்னி ஸந்தானம்	...	126
